# புத்தர் பொம்மை

முரசொலி

**சொர்ணம்**

UNIVERSITY EXTENSION LIBRARY
26 SEP 1961
MADURAI



அருமையான குழந்தைகளுக்கு

## அழகான புத்தகங்கள்

| | ரூ. | ந.பை. |
|---|---|---|
| சங்கனும் ரங்கனும் | 1 | 00 |
| தங்க நகரம் | 1 | 00 |
| யானையில் பறந்தவன் | 0 | 50 |
| அழகு ரோஜா | 0 | 50 |
| வாத்தியக்கார வடிவேலு | 0 | 40 |
| பாலர் கதைகள் (4-ம் பதிப்பு) | 0 | 37 |
| சிட்டுக் குருவி | 0 | 31 |
| பாலர் பாடல் (2-ம் பதிப்பு) | 0 | 31 |
| காந்தித் தாத்தா | 0 | 31 |
| வீராதிவீரன் | 0 | 31 |
| நிமிஷக் கதைகள் | 0 | 31 |
| மல்லிகை | 0 | 25 |
| கண்டெடுத்த குழந்தை | 0 | 25 |
| அண்டப்புளுகன் | 0 | 19 |
| குண்டுமணி | 0 | 19 |

(தபால் செலவு தனி)

*

# தமிழ் நிலையம்

புதுக்கோட்டை

*


---


அச்சிட்டோர்:

கோவாபரேடிவ் பிரஸ் லிமிடெட், புதுக்கோட்டை.

# புத்தர் பொம்மை

முதலிய கதைகள்

*

முதற்பதிப்பு : நவம்பர் 1957
உரிமை பதிவு செய்யப்பெற்றது

*

விலை : ரூபாய் ஒன்று

UNIVERSITY
1961
MADURAI

சித்திரம் :

**சாகர்**

**அருமைக் குழந்தைகளே,**

உங்களுக்காகப் பல ஆண்டுகளாக இனிய கதைகளை எழுதி வருபவர் திரு. சொர்ணம் அவர்கள். இதுவரை இவர் நூற்றுக் கணக்கான கதைகளை எழுதியிருக்கின்றார். நல்ல தமிழில், எளிய நடையில், சிறந்த பண்புகளைக் கதைமூலம் எடுத்துக்காட்டுவதில் இவர் கைதேர்ந்தவர்.

'புத்தர் பொம்மை' என்ற இந்தப் புத்தகத்தில் கதைகள் இருக்கின்றன. இவை 'முரசொலி' யிலும், 'பூஞ்சோலை'யிலும் வெளிவந்தவை. அந்தப் பத்திரிகைகளின் ஆசிரியர்களுக்கும், இந்தக் கதைகளைப் புத்தகமாக வெளியிட அனுமதி தந்த திரு. சொர்ணம் அவர்களுக்கும் எங்களது மனப்பூர்வமான நன்றி.

புதுக்கோட்டை
12—11—57

**தமிழ் நிலையத்தார்.**

## என்னுரை ......

" தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும் " என்பார்கள். அது ஒரு அளவுக்கு உண்மை தான். பிஞ்சு உள்ளங்களிலே பதிந்து விடுகிற கருத்துக்களை மீண்டும் மாற்றி அமைப்பது சுலபமான காரியமில்லைதான். தாய்ப் பாலிலே ஒரு குடும்பத்தின் கதையும், தேசத்தின் வரலாறும் அடங்கியிருக்கிற தென்பார்கள்.

" சிவாஜி வீரனாக மாறியது அவனது தாய் ஜீஜிபாயினால்தான் ! "

" ஜப்பான் நாட்டுத் தாய்மார்கள் நவீன உலகத்தின் ஜோதி விளக்குகள் ! "

" தமிழகத்தின் புறநானூற்றுத் தாய்மார்கள் சரித்திரத்தின் பொன்வரிகள்!"

" அஞ்சு கண்ணன்—பூச்சாண்டி—பேய், பூதம்—போன்ற பயமுறுத்தல் விளையாட்டுக்களால் குழந்தை உலகம் கோழை நெஞ்சுடன் வளர்ந்திடத் துவங்குகிறது. அதை மாற்றி அமைத்திட அறிவுலகம் விரும்புகிறது......"

—'**முரசொலி**' இதழில் '**பிறைவானம்**' என்ற பிள்ளைகள் பகுதியைத் துவக்குவதற்கு முன் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள் இப்படி முன்னுரை எழுதினார்கள். நாட்டின் 'நாளைய மேதை'களை நேர்வழி நடத்திச் செல்ல பெற்றவர்கள் இருக்கிறார்கள், பள்ளி ஆசிரியர்கள் இருக்கிறார்கள்; அதைப்போலவே அவர்களுக்கு மட்டுமே என்று சொல்லிக்கொள்ளும் எழுத்துக்களும் இருக்க வேண்டும்—என்பது அவர்களது ஆவல்! அந்த நல்லாசான் ஊட்டிய கருத்தும்,காட்டிய பாதையும் தான் எனது மூலதனம்—இந்தப் புத்தகத்தின்கரு!

விளையும் பயிராம் குழந்தைச் செல்வங்களுக்கு நல்ல உரமாக அமையவேண்டும் என்ற ஆசையுடன் நான் அப்போதைக்கப்போது சிறுகதைகள் பல எழுதினேன். அவற்றில் சிலவற்றை உங்களுக்கு எடுத்துத் தருகிறார், தமிழ் நிலயம் **சுப. நடேசன்** அவர்கள், புது உருவில்—புத்தக வடிவில்! குழந்தை இலக்கியத்தின் வளர்ச்சிக்கென்றே பாடு படுபவர் அவர். அந்த முயற்சியில் அவரை எதிர்த்த சக்திகள் ஏராளம். எதையும் தாங்கிக்கொண்டு விடலாம்; ஆனால், 'நஷ்டம்' என்ற பயங்கர எதிர்ப்பைக் கண்ட பின்னரும்கூட அவர் கவலையுற்றதில்லை! தான் கொண்ட கொள்கை வழிநின்று, தமிழகத்து மழலைச் செல்வங்களுக்கு அநேக நூல்களைத் தந்திருக்கின்றார். அவற்றுள் ஒன்றுதான் இது!

இந்த நூல் வெளிவருவதற்குப் பேருதவி புரிந்தவர் **குழந்தைக் கவிஞர் திரு. அழ. வள்ளியப்பா** அவர்கள்.

"ஏடு தூக்கிப் பள்ளியில்
இன்று பயிலும் பையனே
நாடு காக்கும் தலைவனாய்
நாளை விளங்கப் போகிறான்"

—என ஆரூடம் கணித்து, அந்த ஆரூடம் பலிக்க வேண்டுமே என்ற ஒரே ஆசையால் பாடுபட்டு வரும் அவர்களது மேற்பார்வையிலே இந்த நூல் வெளிவருவது பெருமகிழ்ச்சிக்குரியது—அவர்களுக்கு என் நன்றி!


அன்புள்ள
**சொர்ணம்**

சென்னை
5–11–57




## உள்ளே...


| | |
|---|---|
| புத்தர் பொம்மை | .... 9 |
| அன்பளிப்பு | .... 18 |
| புத்திசாலி முத்து | .... 30 |
| மான்குட்டி | .... 38 |
| காற்றுடி | .... 47 |
| முயல் குட்டி | .... 54 |
| மிட்டாய்க்காரன் | .... 63 |
| கிளியின் கதை | .... 72 |

UNIVERSITY EXTENSION



# புத்தர் பொம்மை

எதிரே பயங்கரமாக உறுமிய வண்ணம் பாயத் துடிக்கும் வேங்கை—பின்னால் படமெடுத்தாடும் பாழும் நாகம்—தலைக்கு மேலே கூரிய நகங்கள் விரித்துக் கொத்திடப் பறக்கும் கழுகுக் கூட்டம்—இதற்கிடையில் ஒரு பச்சிளம் பாலகன் சிக்கிக்கொண்டால்?....

"அப்பப்பா! நினைக்கும்போதே நடுக்கம் பிறக்கிறதே! எதற்காகவாம் இப்படியொரு பயங்கரமான கற்பனை?" என்று கேட்கிறீர்களா?

அதோ பாருங்கள், நடுங்கும் கால்கள்—கலங்கும் கண்கள்—அவற்றிலிருந்து வழிந்தோடும் கண்ணீர் வெள்ளம்—இந்தப் பரிதாபமான கோலத்தோடு நிற்கிறுனே ஒரு சிறுவன், அவனது வேதனையான நிலையை விளக்கத்தான் இந்தக் கற்பனை! அவனுக்கு ஏன்தான் இந்த நிலை வந்தது? இத்தனைக்கும் அங்கே வேங்கை, பாம்பு, கழுகு எதுவுமே இல்லையே! இல்லைதான் — உண்மைதான்! ஆனுல் அவை அனைத்தும் ஒன்ருக உருவானதோ என்று நினைக்கும் வண்ணம் அவன் எதிரில் கோபத்தோடு நிற்கிருர், ஒரு கரிய உருவ பெரிய மனிதர்!

"ஏண்டா ஊமைபோல் நிற்கிருய்?...சொல்லுடா; எங்கே அந்தப் பொம்மை?"—அந்த மனிதர் பேசினுர். இல்லை; வேங்கைபோல் உறுமினுர். பாம்புபோல் சீறினுர். அவருடைய குரல் அவ்வளவு 'இனிமை'யாக இருந்தது!

முத்து—அவன்தான் அந்தச் சிறுவன் ஒரு முறை தன் நடுங்கும் கைகளால் கண்களில் வழிந்தோடிய கண்ணீரைத் துடைத்துக்கொண்டான்.

"சொல்லித் தொலையேண்டா!...." என்று அவர் மீண்டும் கத்தினுர்.

"வந்து... வந்து....அதை ...நான்...." முத்துவால் பேச முடியவில்லை. வார்த்தைகள் தொண்டைக் குழியைவிட்டு வெளியே வர மறுத்தன. அவன் ஏன் தான் அப்படி உளறுகிருன்? அவன் செய்துவிட்ட தவறுதான் என்ன?

எதிரே நின்றுகொண்டிருந்த முரட்டு மனிதர் இந்தக் காரணங்களுக்கெல்லாமா, காத்துக்கொண்டிருப்பார்? அவர் முதலாளி ஆயிற்றே! முன்யோசனை இல்லாமையும் மூர்க்க குணமும் அவரது உடன் பிறப்பாயிற்றே! வேகமாக அவன் எதிரே பாய்ந்தார். மறு கணம், முத்து "ஐயோ" என்று அலறிவிட்டான்.

அவன் சிறுவன்தானே! முதலாளியின் கோபப் பார்வையை—கொடூரப் பேச்சை அவன் தாங்கிக் கொள்ளும் சக்தி எப்படி இருக்க முடியும்?

"கத்துடா கழுதை! எவ்வளவு அழகாக இருந்தது அந்த புத்தர் பொம்மை!.. அதை விற்றுக் கிடைத்த பணத்திற்கு என்ன வாங்கி தின்றுத் தொலைத்தாய்?.... திருட்டுப் பயலே!...." என்று அந்த மனிதர் மீண்டும் இரைந்தார்.

"ஐயோ! நான் திருடனு?...." — தன்னையும் மீறி இப்படிக் கத்திவிட்டான் முத்து. பயந்து நடுங்கிக் கொண்டிருந்த அவனது குரலுக்கு அத்தனை பலம் எங்கிருந்துதான் வந்தது? சற்றும் எதிர்பாராத வண்ணம் தன்மீது அபாண்டப்பழி சுமத்தப்படும்போது குற்றமற்ற தூயவன் எப்படித் துடிப்பான்; துவளு வான்! தாங்கிக்கொள்ள முடியுமா, அந்த சுடுசொற் களை! 'நான் திருடனு?' என்று கேட்டுவிட்டு விக்கி விக்கி அழுகிருனே அந்த நல்ல தம்பி; அவனும் குற்ற மற்றவன்தான்!....

ஆனல், அன்று காலையில் நிகழ்ந்த அந்தச் சம்பவம்........

"பொம்மை வாங்கலையோ—புதிய
பொம்மை வாங்கலையோ...?"

பொம்மைகள் அடங்கிய ஒரு தள்ளுவண்டியை நகர்த்திய வண்ணம் இப்படிப் பாடிக்கொண்டு சென் ருன் முத்து. ஆமாம்; அவன் முதலாளி ஒரு பொம்மை வியாபாரி. அவன் — அந்த அனதைச் சிறுவன்—கூலிக்கு பொம்மை விற்கும் ஓர் அடிமை!

சீமான்கள் வாழும் தெருவொன்றில் அவன் நுழைந்தான். ஓரிடத்தில் நின்ருன். வழக்கம்போல்பாட ஆரம்பித்தான். அவனது இனிமையான குரலுக்குப்

பலன் இல்லாமலா போகும்? குழந்தைகளின் கண்ணோரத்தில் ஒரு துளி கண்ணீரைக் கண்டாலும் துடித்து விடுவார்களே, பெற்றவர்கள்! அதுவும் பணம் படைத்தவர்களைப் பற்றி கேட்கவா வேண்டும்? அன்று நல்ல வியாபாரம்! வண்டியிலே இருந்த கண்ணைப் பறிக்கும் பல வண்ணப் பொம்மைகள் ஒவ்வொன்ருகப் பறந்தன. காசு குவிந்தது. முத்துவுக்குக் கொள்ளை மகிழ்ச்சி! வண்டியைத் தள்ளிக்கொண்டு நகரத் தொடங்கினன்.

ஆனல், அவன் கால்கள் ஏனே திடுக்கிட்டு நின்று விட்டன. வண்டியின் பக்கத்திலே நின்று கொண்டு, பொம்மைக் குவியலுக்கிடையே கிடந்த ஒரு புத்தர் பொம்மையை வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்த சிறுமி ஒருவள்தான் அவன் கவனத்தைக் கவர்ந்து விட்டாள், அப்போது! கிழிந்த உடை—பரட்டைத் தலை—'பாவ'மான தோற்றம் — இவை அந்தச் சிறுமியை 'ஏழை' என்று எடுத்துக்காட்டின. அவளது ஏக்கப் பார்வை முத்துவை என்னவோ செய்தது.

"என்ன பாப்பா; என்ன வேண்டும்?" என்று கேட்டான் பரிவோடு.

புத்தர் பொம்மையின்மேல் நிலைகுத்தி நின்ற கண்களை நகர்த்தினள் அந்தப் பாப்பா. முத்துவை நோக்கினள். அவளது கண்களிலே கலங்கி நிற்கும் கண்ணீர்........அதற்கு என்ன பொருள்?

"பாப்பா! ஏன் பாப்பா அழுகிருய்?...." — முத்துவின் குரலிலே பாசம் கலந்திருந்தது.

"பொம்மை " என்று கையைக் காட்டி மழலை பேசினள் அந்தப் பாப்பா.

"எந்தப் பொம்மை?"

"அதோ, அந்த புத்தர் பொம்மை! அவரைப் பத்தி நான் புத்தகத்திலே படிச்சிருக்கேனே!....ம்... எனக்குத் தர்றியா?........" என்று ஆவலுடன் கேட்டாள் அவள்.

"ஓ, தாராளமா....காசை எடு!...."

"காசா ..?"—பரிதாபத்தோடு இப்படிச் சொல்லிய அந்தப் பாப்பா தன் உதடுகளைப் பிதுக்கிக் காட்டினாள். அவள் கண்கள் கலங்கின. அழுகையும் கிளம்புவதற்குத் தயாராக நின்றது. பாவம், தன்னைப் போன்ற சிறுமிகள் ஆளுக்கொரு பொம்மை வாங்கி, சிரித்துக் களித்துச் செல்வதைக் கண்ட பிஞ்சு நெஞ்சல்லவா; ஆசை தோன்றத்தானே செய்யும்? கிடைக்காவிட்டால் அழுகையும் வரத்தானே செய்யும்?

முத்துவின் மனம் வேதனையால் நிரம்பியது. தனக்கு ஒரு தங்கை இருந்து—அவளும் இதைப்போல் பொம்மைக்கு ஆசைப்பட்டு, கண்ணீரை மட்டுமே பதிலுக்குப் பெற்றால் அவன் என்ன செய்வான்? உயிரைக் கொடுத்தாவது தங்கையின் ஆசையை நிறைவேற்றி வைக்க மாட்டானா? இதோ, கண்ணீர் விட்டபடி நிற்கிறாளே அவள் 'உடன் பிறக்காத தங்கை'—இப்போது அவன் என்ன செய்யவேண்டும்?

ஏழையைக் கண்டு ஏழைதானே இரங்க வேண்டும்! முத்து அந்தப் பொம்மையைப் பார்த்தான். புத்தர் புத்தர்! 'அன்பு' பற்றி உலகுக்கு உரைத்த மேதை! அப்போதும் அவனுக்கு 'அன்பை'ப் போதித்து விட்டார்! முத்து, தான் அப்போது என்ன செய்யவேண்டும் என்பதைக் கண நேரத்தில் உணர்ந்துகொண்டுவிட்டான். மறுகணம் அந்த புத்தர் பொம்மையை எடுத்தான். கணக்கு பார்த்துக் காசு வாங்கும்போது முதலாளி கோபிப்பாரே என்று நினைக்கவே இல்லை. அதை அந்தப் பாப்பாவிடம் கொடுத்தான். அவளும் வாங்கிக் கொண்டாள்.

அப்பப்பா.......அவள் முகத்திலேதான் எவ்வளவு களிப்பு! சிரித்துக் கொண்டே ஓடினாள். பக்கத்திலிருந்த தன் குடிசைக்குள் நுழைந்தாள்.

முத்துவும் கலகலவென்று சிரித்தான். கவலையால் வாடிக்கொண்டிருந்த ஒரு தங்கையின் கண்ணீரைத் துடைக்க முடிந்ததல்லவா; அந்த மகிழ்ச்சி அவனுக்கு! பெருமை அவனுக்கு! ஆனால் அந்த அன்புச் செயல் தான் அவனை சொல்ல முடியாத சோக நிலைக்கு இழுத்துக் கொண்டு சென்று விட்டது....' திருடன்' என்ற தீய பட்டம் சுமத்தி துடித்திடச் செய்து விட்டது!...

"நான் திருடவில்லை எசமான்! என்னை மன்னித்து விடுங்கள்....அந்த பொம்மையை அழுது கொண்டிருந்த ஒரு பாப்பாவுக்கு இனமாகக் கொடுத்து விட்டேன்!.. நான் திருடவில்லை....தயவு செய்து இன்னுமொரு முறை அப்படிச் சொல்லாதீர்கள்! என்னால் தாங்கவே முடியாது!" உண்மையைச் சொல்லிவிட்டான் முத்து, தனது முதலாளியிடம்.

முதலாளி மகிழவில்லை. இரக்க நெஞ்சமில்லா அந்தக் கோபக்காரருக்கு அன்பைப்பற்றி என்ன தெரியும்? முத்துவின் தூய உள்ளத்தை—தயாள குணத்தைக் கிண்டல் செய்தார்; கேலி புரிந்தார்; 'அடுக்குமா இந்த அநியாயம்' என்று சீறிப் பாய்ந்தார்.

"இனம் கொடுத்தாயா, முட்டாளே! எவன் வீட்டு சொத்து? வியாபாரத்திற்குத் தான் உன்னை அனுப்பினேனே தவிர; வீதியிலே இரைத்துவிட்டு வருவதற்கா?...."

"தவறென்று தெரிகிறது எசமான் எனக்கும்! ஆனால் தவிர்க்க முடியவில்லையே; என்ன செய்வேன்? என்னை மன்னித்து விடுங்கள்! அதற்கான தொகையை என் சம்பளத்திலாவது பிடித்துக் கொண்டு விடுங்கள்!" என்று கெஞ்சினான் முத்து.

"இது ஒரு ரூபாய் விவகாரம்—சம்பளம் இருக்கிறதே என்கிருய்! முட்டாளே, நாளைக்கு இதுபோல் பத்துரூபாய் பொருளைத் தானம் தந்துவிட்டு வந்து என் எதிரே தலை குனிந்து நின்ருல்....நான் என்ன செய்வேன்? இப்போது நான் செய்ய வேண்டியது ஒன்றே ஒன்றுதான்! ஓடு வெளியே! அதிகப் பிரசங்கியே, இனிமேல் இங்கில்லை வேலை உனக்கு!" கோபம், கொடூரம் இவற்றின் துணையோடு முதலாளியின் கட்டளை இப்படிப் பிறந்து விட்டது!

முத்து வெளியே ஓடினுன். வேகமாக நடந்தான். "என்ன உலகம் இது! ஐயோ, நான் என்ன பயங்கரமான குற்றம் செய்து விட்டேன்? அன்பு கொண்டது தவரு? அன்பு என்ன அத்தனை ஆபத்தான ஒன்ரு?" என்று குழம்பினுன். சொல்லடிபட்ட அவனது உள்ளம் 'வலி' தாங்காது துடித்தது. அவன் நடந்தான்; நடந்து கொண்டே இருந்தான்.

வெகு தூரம் நடந்துவிட்டான், அவன்.

ஓரிடத்தில் நின்ருன். எங்கே வந்துவிட்டோம் என்று பார்த்தான். பாப்பாவுக்கு பொம்மை கொடுத்தானே; அந்த இடம்தான் அது! முத்து எதுவோ யோசித்தான். 'அவளுக்கு சிரிப்பு தந்தேன், நான்! எனக்கு அழுகைதான் கிடைத்தது பதிலாக! போகட்டும்; அந்தத் தங்கத் தங்கை மகிழ்வதை — எனது அன்பில் விளைந்த அந்த அற்புதக் காட்சியை யாவது கண்டு களிப்போம்!' என்று எண்ணினுன். அவளது குடிசையை நெருங்கினுன். மெதுவாகத் தலையை உள்ளே நீட்டினுன்.

அதே சமயம்........

வேகமாக வீசி எறியப்பட்டு பாய்ந்து வந்த ஏதோ ஒன்று அவன் தலையைத் தாக்கியது; கீழே விழுந்தது. அதைச் சற்றும் எதிர்பாராத முத்து "ஐயோ" என்று

அலறினன். கீழே பார்த்தான். புத்தர் பொம்மை! மாலையில் அவன் அன்பளிப்பாக தங்கை ஒருவளுக்குத் தந்தானே அந்தப் புத்தர் பொம்மைதான்! ஆனல் இப்போது சுக்கல் சுக்கலாக உடைந்து கீழே சிதறிக் கிடந்தது!

முத்துவுக்கு ஒன்றுமே புரியவில்லை! அப்போது உள்ளேயிருந்து எழும்பியது ஒரு கோபக்குரல். "இனம் கொடுத்தானும் இனம்! ஏழை சிந்தும் கண்ணீருக்கு எவன் மதிப்பு கொடுப்பான்? இந்தக் காலத்தில் எவன் இனம் கொடுப்பான்? முளைக்கும்போதே ஏன் நாயே பொய் சொல்லுகிருய்? பொம்மை வாங்க ஏது காசு? எங்கே திருடினய்?" என்று அதட்டியது அந்தக் குரல். அதைத் தொடர்ந்து அடிக்கும் ஒலியும், அந்தப் பாப்பா அலறும் சப்தமும் எழும்பியது.

முத்துவுக்கு எல்லாம் புரிந்துவிட்டது. அவனுக்கு வாய்விட்டுக் கதற வேண்டும் போலிருந்தது. சிதைந்து கிடந்த புத்தர் பொம்மையை நோக்கினன்.

அவர் போதித்த அன்பு எங்கே போயிற்று?

"அன்பு கொள்வீர்; அறமொடு வாழ்வீர்" என்று அவர் போதித்த அறிவுரைகள் என்னவாயிற்று?

முத்துவுக்கு வாய்த்த முதலாளி – அந்தப் பாப்பாவுக்கு வாய்த்த அப்பா—இப்படியாக இந்த உலகத்துக்கு வாய்த்த அன்பற்றவர்கள் எத்தனையோ பேர்!

முத்து தன் தலையில் வழிந்த இரத்தத்தைத் துடைத்தான். செந்நிறமான கையை வெறிக்கப் பார்த்தான். ஏனே சிரித்தான். அந்தச் சிரிப்பிலே அடங்கியிருக்கும் பொருள் என்ன? அந்தக் கேள்வியை முத்துவிடமே கேட்டு விட்டால் என்ன? ஆனல், அதற்குள் அவன் நடக்கத் துவங்கி விட்டானே! அவன் எங்கே


போகிருன்? "ஐயோ, உலகமே! அன்பு நெஞ்சம் கொண்டோர் பரந்துகிடக்கும் உன் மேனியில் எந்த மூலையில் இருக்கிருர்கள்?" என்று தேடிக்கொண்டு செல்கிருனே? இருக்கலாம்; இருக்கலாம்! எனினும் மிக மிகக் கடினமான பயணமல்லவா, அது!


ஆனல் தம்பிகளே! தங்கைகளே! அந்தப் பரிதாபத்திற்குரிய முத்து நண்பன் உங்களிடையே உலவுவான்; உங்களிடமும் வரலாம்; வருவான். அப்படி வந்தால் நீங்கள் என்ன செய்ய வேண்டும்? "அன்புள்ள முத்துத் தம்பியே! உன் கதை எனக்குத் தெரியும்! நீ எங்கு நடந்து கொண்டேயிருக்கிருய் என்றும் நான் அறிவேன்! நீ தேடிச் செல்கிருயே, அந்த அன்பு நெஞ்சம் இதோ என்னிடம் இருக்கிறது! நான் படித்திருக்கிறேனே....

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு"

என்ற திருவள்ளுவரின் பொன்மொழிகளை அதன் உள்ளே புதைந்து கிடக்கும் உட்பொருளை அன்பின் வலிமையை — நான் உணர்ந்திருக்கிறேன்!" என்று பெருமையோடும் பூரிப்போடும் சொல்லுங்கள்!

அன்பு பூண்டு வாழுங்கள்!





# அன்பளிப்பு

மாலை நேரம். மணி ஐந்து. பள்ளிக்கூடம் விடப்பட்டுவிட்டது என்பதற்கு அறிகுறியாக பையன்கள் சாரை சாரையாகச் சென்றுகொண் டிருந்தனர்.

அந்தத் தெருவின் கோடியிலே ஒரு வீடு. நடந்து கொண்டிருந்த பையன்கள் அந்த வீட்டின் முன்னல் வந்ததும் நின்று விட்டார்கள். தோளிலே புத்தகப் பை தொங்க ஒரு பையன் அந்த வீட்டிற்குள் ஓடினன். போன வேகத்தோடு திரும்பியும் வந்தான்.

"டேய், இன்னும் 'சார்' வரவில்லையடா!" என்றான்.

"அப்படியா? இன்னும் வரவில்லையா? அப்படியானால் நாளைக்கு வந்து பார்த்துக்கொள்ளலாம்!" என்று அந்த மற்ற பையன்கள் சொல்லவில்லை. வீட்டிலே காத்திருக்கும் 'காபி'யையும், பலகாரத்தையும் எண்ணி ஓடிவிடவில்லை. அவர்களில் ஒருவன்கூட அந்த இடத்தைவிட்டு நகரவில்லை. காத்துக்கொண்டே நின்றார்கள்.

"டேய், அதோ சார் வந்துவிட்டாரடா," என்று ஒரு பையன் கத்தினான். மறுகணம் எல்லாப் பையன்களுடைய கண்களும் அந்தத் தெருவின் முனையை ஆவலுடன் நோக்கின. அங்கே வந்துகொண்டிருந்தார் அந்தப் 'பெயர் தெரியாத சார்'. ஆமாம்; அவருடைய பெயர் என்னவென்று அந்தப் பையன்களில் அநேகருக்குத் தெரியாது. "சார்"—இதுதான் அவருக்கு அவர்கள் சூட்டிய செல்லப் பெயர்!

சார், வீட்டை நெருங்கிவிட்டார். அவருடைய கையில் இரண்டு புதுப் புத்தகங்கள் இருந்தன. அவர் வீட்டுக்குள் நுழைந்தார். அவருடைய கையைப் பிடித்துத் தொங்கிக்கொண்டே பையன்களும் உள்ளே புகுந்தார்கள்.

அவர் உள்ளே சென்றதும் தன் சட்டைகளைக்கூட கழற்றவில்லை. கழற்றும்படி விட்டால்தானே, அந்தச் 'சிறுவர் படை'!

"சார், நேற்று நீங்கள் கொடுத்த இந்த இரண்டு புத்தகங்களையும் ஓர் எழுத்துகூட விடாமல் படித்து முடித்துவிட்டேன், சார்!"

"சார், நீங்கள் சொல்லியது போலவே புத்தகங்களைக் கொஞ்சம்கூடக் கசங்காமல் படித்துவிட்டேன், சார்!"

"சார், அந்தக் கதையை என் பாட்டியிடம் கூட படித்துக் காட்டினேன் சார். 'ரொம்ப ரொம்ப அற்புதம்' என்று சொன்னார்கள், சார்!"

"உங்களுக்காக எவ்வளவு நேரமா காத்துக் கொண்டேயிருந்தோம்; தெரியுமா சார்? ஏன் சார் இவ்வளவு நேரம்?"

இம்மாதிரியான கேள்விகள் கணக்கில்லாமல் கிளம்பி அவருடைய காதுகளில் நுழைந்தன. அவர் எதற்கென்று பதில் சொல்வார்? மலர்ந்த முகத்துடன் அங்கிருந்த அலமாரியைத் திறந்தார். அதிலே ஏராளமான குழந்தைப் புத்தகங்கள் அழகாக— வரிசை வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவர் அதிலிருந்து சில புத்தகங்களை எடுத்தார். சூழ்ந்து நின்ற பையன்களிடம் கொடுத்தார். அவர்கள் திருப்பிக் கொடுத்த புத்தகங்களை வாங்கி அலமாரியில் வைத்துக் கொண்டார்.

அப்படியானால் அது ஒரு புத்தக சாலையோ? ஆமாம்; புத்தக சாலைதான். 'குழந்தை புத்தக சாலை' என்பதுதான் அதன் பெயர். அதில் சேருவதற்கு சந்தா இல்லை; சட்ட திட்டங்கள் இல்லை. யார் வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும் சேரலாம்.

அவர் குழந்தைகளுக்காக வெளிவரும் எல்லா வற்றையும் விலைகொடுத்து வாங்குவார். தன்னுடைய சொந்தப் பணத்திலேயே வாங்குவார். பணம் கொடுத்து புத்தகம் வாங்கிப் படிக்க முடியாத ஏழைப் பிள்ளை களுக்கு மட்டுமல்ல; 'தேவை' என்று வந்த எல்லாப் பிள்ளைகளுக்குமே இலவசமாகக் கொடுப்பார். அவர் கொடுக்கும் ஒவ்வொரு புத்தகத்திலும் 'குழந்தை புத்தக சாலை' என்ற எழுத்துக்கள் காணப்படும்.

புத்தகங்களை வாங்கிக்கொண்ட பையன்கள் ஒவ்வொருவராக நகர்ந்தனர். கடைசியாக ஒரே ஒரு பையன் நின்று கொண்டிருந்தான். பயந்து கொண்டிருந்தான், அந்தப் புதுப் பையன்.

அவர் அவனைப் பார்த்தார். "என்ன தம்பி; என்ன வேண்டும்?" என்று அன்பொழுகக் கேட்டார். அவன் பேசவில்லை; நின்றான்.

"என்ன தம்பி வேண்டும்? இதற்கெல்லாமா பயப் படுவது? ஐயோ, தம்பியே! என்ன வேண்டும் என்று தாராளமாகக் கேள்!" என்றார் அவர், மறுபடியும்!

"சார் சார் ...எனக்குப் புத்தகம் வேணும், சார்!" என்று தயங்கிக் கொண்டே கேட்டான் அச் சிறுவன்.

உடனே அவர் கலகல வெனச் சிரித்தார். "அப்பாடா! இதற்குத்தானா, புலியைக் கண்டு விட்ட வனைப்போல் இப்படி பயந்து சாகிறாய்?" என்றார். பிறகு தன்னுடைய கையிலிருந்த புதுப் புத்தகங்கள் இரண்டிலும் 'குழந்தை புத்தக சாலை' என்று அழகாக எழுதினார். எழுதிவிட்டு அவனிடம் அவைகளைக் கொடுத்தார். அவன் அவற்றை ஆனந்தத்துடன் பெற்றுக்கொண்டான்.

"தம்பீ, உன் பெயரென்ன?" என்று அவர் கேட்டார்.

"என் பெயர் மணி, சார். எட்டாவது படிக் கிறேன், சார். நன்றாகப் படிப்பேன், சார். என் மாமா கூட என்னை 'நல்ல பையன், நல்ல பையன்' என்று அடிக்கடி சொல்லுவார், சார்!" என்று தன்னைத்தானே அறிமுகப்படுத்திக் கொண்டான் அந்த மணி.

"ஓ, நீ மிகவும் நல்ல பையன்தான்; உன் மாமா பொய்யா சொல்லப் போகிறார்!" என்று சிரித்துக் கொண்டே சொன்னார் அவர்.

"சரி, சார். நான் போய் வருகிறேன், சார். இரவிற்குள் இந்த இரண்டையும் படித்து விடுவேன், சார். நாளைக்குத் திருப்பித் தந்து விடுவேன், சார்," என்று அவரிடம் விடை பெற்றுக்கொண்டான், சிறுவன். பின் நகர்ந்தான்.

அதே நேரத்தில், தளர்ந்த நடை—கலைந்த தலை—கலங்கிய கண்கள்—இந்தக் கோலத்தோடு ஒரு சிறுமி உள்ளே நுழைந்தாள். அழுது அழுது அவள் முகம் வீங்கிப்போயிருந்தது. அவளைக் கண்டதும் அங்கேயே நின்றான்; கவனித்தான்.

சார் அவளைப் பார்த்தார், "ஏனம்மா அழுகிறாய்?" என்று மிகப் பரிவுடன் கேட்டார்.

"சார், நேற்று நீங்கள் தந்தீர்களே 'நல்ல நண்பர்கள்' கதைப் புத்தகம், அதை என் தங்கை எடுத்துக் கிழித்துவிட்டாள், சார்! .. அதற்காக என் அப்பா.... என்னை அடித்தார், சார்!" என்றாள் அந்தப் பெண் விம்மிக்கொண்டே.

"அடடா! இதற்காகவா அழுகிறாய்? அழாதேம்மா; நீ வேண்டுமென்றே கிழிக்கவில்லையே! தவறுதலாக நேர்ந்துவிட்டது; யார் என்ன செய்ய முடியும்? அழாதே; கண்ணைத் துடை!" என்று ஆறுதல் சொன்னார் அவர்.

"அப்பா என்னை அடித்துவிட்டு, 'புத்தகத்தைக் கிழிக்கத்தானா அவர் இலவசமாகத் தருகிறார்? அவரிடம் போய் அதன் விலை என்ன என்று கேட்டுவிட்டுவா, பணத்தைக் கொடுத்து விடலாம்,' என்றார். புத்தகத்தின் விலை என்ன சார்?" என்று கேட்டாள், அச்சிறுமி.

"அதெல்லாம் ஒன்றும் வேண்டாம் என்று அப்பாவிடம் சொல்லி விடு. இதற்காக அழலாமா? இதோ பார், 'தங்க நகரம்' என்று ஒரு புத்தகம்.

அதை நீ கூட நேற்றுக் கேட்டாயல்லவா? இப்போது எடுத்துக்கொண்டு போ!'' என்று சொன்னார் அவர். புத்தகத்தை அவளிடம் கொடுத்தார். அதை வாங்கிக் கொண்டு அவள் சென்றுவிட்டாள். நடந்தவை அனைத்தையும் பார்த்துக்கொண்டிருந்த மணியும் நகர்ந்தான்.

* * *

கையிலே புத்தகங்கள் பளபளக்க — முகத்திலே மகிழ்ச்சி தாண்டவமாட வீட்டிற்குள் நுழைந்தான் மணி.

''டேய், கையிலே ஏதடா புத்தகம்? புத்தகம் வாங்க ஏதடா பணம்?'' என்று கோபத்துடன் கேட்டுக் கொண்டே எதிரில் வந்தார் அப்பா. புத்தகம் கிடைத்த கதையை அழகாகச் சொல்லி — அப்பாவின் கோபத்தைத் தணித்துவிட்டு - சமையல் அறையை நோக்கி ஓடினான் மணி. அம்மா தயாராக வைத்திருந்த 'காபி'யை 'மடக், மடக்'கென்று குடித்துத் தீர்த்தான்.

மகனின் கையிலிருக்கும் அழகான, புதிய புத்தகங்களைக் கண்டதும் அம்மா ஆச்சரியப்பட்டாள். அந்தப் புத்தகங்களைப் பற்றியும் அதைக் கொடுத்த 'சாரை'ப்பற்றியும் ஒரு 'குட்டிப் பிரசங்க'மே செய்தான் மணி.

''அடே, இப்படி இலவசமாகக்கூட ஒருவர் கொடுக்கிறாரா? அவர் நல்ல மனது வாழட்டும் மணி. நீ என்ன பண்ணவேண்டும், தெரியுமா? புத்தகத்தைப் பத்திரமாகப் படித்துவிட்டு, பத்திரமாகத் திருப்பிக் கொடுத்துவிடவேண்டும். அதுதான் நீ அவருக்குச் செலுத்துகிற நன்றி!'' என்றாள் அம்மா.

''சரி, அம்மா!'' என்று சொல்லிவிட்டு அறைக்குள் ஓடினான், மணி. புத்தகத்தின் அட்டையையே சிறிது

நேரம் பார்த்து மகிழ்ந்தான். பிறகு விரித்தான். கசங்காமல் படிக்க ஆரம்பித்தான்.

* * *

மறுநாள்—மாலை நேரம். மணி, கையிலே அந்த இரு புத்தகங்களையும் எடுத்துக் கொண்டு, சாரின் வீட்டை நோக்கி நடந்து கொண்டிருந்தான். படித்து முடித்து விட்டான் அவைகளை; திருப்பிக் கொடுக்கத் தான் போய்க் கொண்டிருந்தான். எதிரில் அவனது நண்பன் ஒருவன் வந்து கொண்டிருந்தான். அவன் மணியிடமிருந்த புத்தகங்களை ஆவலுடன் பார்த்தான். புத்தகத்தின் அமைப்பையும், அட்டை அழகையும் கண்டு அதிசயப்பட்டான். "அடே மணி! நீ கொடுத்து வைத்தவனடா! எவ்வளவு அருமையான புத்தகங்கள் எல்லாம் உன்னிடம் இருக்கின்றன! நான் இந்த மாதிரிப் புத்தகங்களைத் தொட்டுக் கூடப்பார்த்ததில்லை," என்ருன்.

நண்பன் போய்விட்டான். "நீ கொடுத்து வைத்தவனடா" என்று அந்த நண்பன் புகழ்ந்தது மணிக்கு அளவற்ற ஆனந்தத்தை அளித்தது. அந்த ஆனந்தத்தைத் தொடர்ந்து அவன் மூளையிலே ஒரு கெட்ட எண்ணமும் தலை நீட்டியது. "நண்பன் சொன்னதைப்போல நான் கொடுத்து வைத்தவனுகவே ஆகிவிட்டால்........? புத்தகங்களைத் திருப்பிக் கொடுக்காமல் நானே வைத்துக் கொண்டால் என்ன? அவர்தான் நல்லவராயிற்றே! கேட்கவே மாட்டார். அப்படியே கேட்டால்தான் என்ன; தம்பி கிழித்து விட்டான் என்று சொல்லிவிட்டால் போகிறது!........" இப்படி எண்ணியது மணியின் சபலப் புத்தி!

"இப்படி எண்ண உன் மனம் எப்படித்தான் துணிந்தது? சொந்த செலவில் உங்களுக்கெல்லாம் புத்தகம் தருகிருரே; அந்தத் தங்க மனிதருக்குத்

துரோகம் செய்யலாமா ?" —இப்படி கேள்வி போட்டது மனச்சாட்சி.

என்ன பலன்? நீதிக்கும் அநீதிக்கும் நடைபெற்ற போராட்டத்தில், மணியின் உள்ளத்திலே தோன்றி விட்ட அநீதியே வெற்றி பெற்று விட்டது ! மறுபடியும் அங்கு ஏன் நிற்கிறான், அவன் ? திரும்பினான் ; வீட்டை நோக்கி வேகமாக ஓடினான். வீட்டை அடைந்ததும் முதல் வேலையாக புத்தகங்களின் உள்ளே இருக்கும் முதல் பக்கங்களைக் கிழித்து எறிந்தான். 'குழந்தை புத்தக சாலை' என்ற எழுத்துக்கள் அந்தப் பக்கங்களில் தானே இருக்கின்றன ! யாரும் கண்டு பிடித்துவிடக் கூடாது என்ற எண்ணத்தினால்தான் அவன் அப்படிச் செய்தான். பிறகு, புத்தகங்களைப் பெட்டியின் அடியில் பத்திரமாக வைத்தான்.

அந்த சமயத்தில் அவன் கைகள் நடுங்கத்தான் செய்தன. உடல் வியர்த்துக் கொட்டியது.

*　*　*

நாட்கள் நகர்ந்துகொண்டிருந்தன மணி 'சார்' வீட்டுப் பக்கம் தலைகாட்டுவதேயில்லை. வீட்டைவிட்டு வெளியில் வருவதற்குக்கூட அவனுக்குப் பயம்தான் !

திடீரென்று அவனுடைய நண்பர்கள் அவன் வீட்டிற்கு ஓடோடியும் வருவார்கள். " மணி, நீ சார் வீட்டுக்கு வரவில்லையா? புத்தகங்கள் வேண்டாமா? ஏன் பெண் பிள்ளை மாதிரி வீட்டுக்குள்ளேயே அடைபட்டுக் கிடக்கிறாய்? " என்று கேள்விமாரி பொழிவார்கள்.

மணி திண்டாடிப் போவான். "என் உடம்பு சரியில்லையடா!", "என் அப்பா வெளியில் கிளம்பினால் காலை முறித்துவிடுவேன் என்கிறார் !" என்றெல்லாம் ஏதேதோ புளுகுவான். அவர்களிடமிருந்து தப்பி விடுவான்.

*　*　*

ஒரு நாள்.......

கூண்டுப் பறவைபோல் வீட்டுக்குள்ளேயே இருந்த மணியிடம் 'திடு திப்'பென்று ஓடி வந்தான் ஒரு நண்பன். "டேய் மணி! உனக்கு சேதி தெரியுமா? நம்ம சார் வீட்டைக் காலி பண்ணிக் கொண்டு போகப்போகிறாராம். அவரை வேறு ஊருக்கு திடீரென்று மாற்றிவிட்டார்கள். வருகிறாயா, அவர் வீட்டுக்குக் கடைசி முறையாகச் சென்று பார்த்து விட்டு வந்து விடலாம்!" என்று சொன்னான். அப்போது அவன் குரலில் மகிழ்ச்சி இல்லை; துக்கம் தொனித்தது.

அதைக் கேட்ட மணிக்கு உள்ளூற மகிழ்ச்சி! ஆனாலும் வெளியில் காட்டிக்கொள்ளவில்லை. "நான் இப்போதுதான் அவரைப் பார்த்துவிட்டு வருகிறேன்; நீ போய் வா!" என்று புளுகினான்.

நண்பன் சிட்டைப்போல் பறந்து சென்று விட்டான். மணியின் முகம் மலர்ந்தது. 'அப்பாடா, சார் போய்விடுவார்! இனி நான் வீட்டுக்குள்ளேயே அடைபட்டுக் கிடக்க வேண்டியதில்லை. புத்தகங்களும் இனி நிரந்தரமாக எனக்குச் சொந்தமாகிவிடும்.' என்று எண்ணி மகிழ்ந்தான். அதே சமயம் அவன் மனதில் மற்றொரு ஆசையும் தோன்றியது.

'இன்று மாலையே அவர் புறப்படுவதாக நண்பன் சொன்னானே, அவர் வீட்டுப் பக்கமாகப் போய்த்தான் பார்ப்போமே! எப்படிப் போகிறார்; யார் யார் வந்திருக் கிறார்கள் என்றாவது தெரிந்து கொள்ளலாமல்லவா?' என்று நினைத்தான். நினைத்தபடி செய்யவும் துணிந்தான். அவரது வீட்டுக்கு மூன்று, நான்கு வீடுகளுக்கு முன்னால் மணியின் மாமா வீடு இருந்தது. அங்கு சென்று ஒளிந்திருந்து பார்ப்பது என்று முடிவு செய்தான் மணி.

மாலை நான்கு மணி இருக்கும். மணி மெதுவாக யாரும் பார்க்ாதபடி மாமாவின் வீட்டுக்குச் சென்று விட்டான். திண்ணையிலேயே பதுங்கிக் கொண்டிருந்தான்.

அங்கே........ஒரு 'டாக்சி' நின்று கொண்டிருந்தது. அதைச் சுற்றி பையன்களும் பெண்களுமாக அநேகர் நின்று கொண்டிருந்தனர். பையன்களில் சிலர் வீட்டிலிருந்த சாமான்களை 'டாக்சி'யில் கொண்டு வந்து வைத்துக்கொண்டிருந்தனர். ஒருவன் அவருடைய பெட்டியைத் தூக்கிக் கொண்டு வந்தான். ஒருவன் படுக்கையைத் தலையில் சுமந்து கொண்டு ஓடிவந்தான். ஒரு வாண்டுப் பயல் அவருடைய கூஜாவைத் தூக்கிக் கொண்டு 'குடு, குடு' வென்று ஓடிவந்தான். இவைகளை எல்லாம் ஒளிந்திருந்து பார்த்துக் கொண்டிருந்த மணியின் மனம் குழம்பியது.

'எல்லோரும் அவருக்கு இப்படி உறுதுணையாக இருக்கிறார்களே! அவர் செய்த உதவிக்கு நன்றி செலுத்துகிறார்களே! நான் மட்டும் ஏன் இப்படித் தனிப் பையனாக இருக்க வேண்டும்? நான் தனிப் பையன்தான்; அவர்களுடன் சேரத் தகுதியற்றவன் தான்!' இப்படி எண்ணலானது அவனுடைய குழம்பிய மனம்.

அப்போது புன்னகை தவழும் முகத்துடன் வெளியே வந்தார் அந்த 'சார்'. தனக்காகப் 'பெரிய பெரிய' உதவிகளைச் செய்யும் சிறுவர்களைப் பார்த்தார். அப்போது, அவருடைய கண்களில் கண்ணீர் பெருகியது.

இங்கே........மணியின் கண்களிலும் கண்ணீர் பெருகியது. 'அடப் பாவி, இந்த உத்தமருக்கா துரோகம் செய்தேன்? இவரிடமா திருடினேன்? அன்று புத்தகத்தைக் கிழித்துவிட்டு வந்து அழுதாளே

ஒரு பெண்; கொஞ்சமாவது கோபப்பட்டாரா இவர்? ஆறுதல் அல்லவா சொன்னார்! முன்பின் அறிமுகமில்லாத நான் 'புத்தகம்' என்று கேட்டவுடனே, கொஞ்சமாவது தயங்கினாரா? அன்று தான் வாங்கி வந்த அந்தப் புத்தம் புதிய புத்தகங்களை அப்படியே கொடுத்து விட்டாரே! அவரிடமா நான் புத்தகங்களை அபகரித்தேன்? அன்று அம்மா என்ன சொன்னாள்? 'புத்தகத்தைப் பத்திரமாகப் படித்து விட்டு, பத்திரமாகத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். அதுதான் நீ அவருக்குக் காட்டும் நன்றி' என்று சொன்னாளே; இப்போது நான் என்ன காரியம் செய்துவிட்டேன்!.... அப்பப்பா!....அதனால்தான் நான் இப்போது தனியாக நின்று தவிக்கிறேன்! நானும் நண்பர்களுடன் சேர வேண்டும்! நன்றியுடன் அவரை வழியனுப்ப வேண்டும்! இதோ, இப்போதே வீடு செல்கிறேன்; புத்தகங்களை எடுத்து வந்து அவரிடம் கொடுத்து மன்னிப்பு கேட்கிறேன்!' இப்படி எண்ணினான் மணி. அவன் மனம் திருந்தி விட்டது.

உடனே, திண்ணையிலிருந்து குதித்தான்; வீட்டை நோக்கி ஓடினான்; அவசர அவசரமாகப் பெட்டியைத் திறந்தான்; புத்தகங்களை எடுத்துக் கொண்டான்; திரும்பி ஓடிவந்தான்.

மணி 'டாக்சி'யை நெருங்கிவிட்டான். அப்போது தான் உள்ளே ஏறி உட்கார்ந்தார், 'சார்'.

"சார், சார்! புத்தகம் சார்....... திருப்பிக்கொண்டு வந்துவிட்டேன், சார்!......"என்ற குரலைக் கேட்டு திடுக்கிட்டார்; திரும்பிப் பார்த்தார். மணி நின்று கொண்டிருந்தான். மூச்சு இரைக்க இரைக்க— உடலெல்லாம் வியர்வை கொட்ட நின்றுகொண்டிருந்தான்!


அவன் நீட்டிய புத்தகங்களை அவர் வாங்கவில்லை!

"ஓ, புத்தகங்களா? நீயே வைத்துக் கொள்; என் அன்பளிப்பாக வைத்துக் கொள். புரிகிறதா? நான் உன்னை விட்டுப் பிரிகிறேனல்லவா, அதற்காகத்தான் இந்த அன்பளிப்பு! மேலும், என்னை நீ எப்போதும் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டுமல்லவா?" என்று அன்பு ததும்பச் சொன்னார், அவர்.

மணி பேசவில்லை; சிலைபோல் நின்றான். 'டாக்சி' நகர்ந்தது. சார் சன்னல் வழியாகத் தலையை நீட்டினார். அவர் கண்கள் கலங்கி இருந்தன "தம்பி, தங்கைகளே! என்னை மறந்துவிட மாட்டீர்களே?" என்று கேட்டார். அவர் குரல் தழதழத்திருந்தது.

"மறக்க மாட்டோம் சார்! மறக்க மாட்டோம்!" என்று எல்லோரும் சப்தம் போட்டார்கள். கைகளை உயரத் தூக்கி வழியனுப்பினார்கள்.

மணி மட்டும் அசையாமல் நின்ற இடத்திலேயே நின்றான். கண்களில வழிந்த கண்ணீர்த் துளிகள் கையிலிருந்த புத்தகங்களில் விழுந்து சிதறியதைக்கூட அவன் கவனிக்கவில்லை. அவன் வாய் மட்டும் "அன்பளிப்பு!......... அன்பளிப்பு!" என்று முணுமுணுத்துக்கொண்டேயிருந்தது!





# புத்திசாலி முத்து

மணி இரண்டு !

பள்ளிக்கூடத்து பெரிய மணி, 'டாண். டாண்' என்று 'முதல் மணி' அடித்தது ; ஓய்ந்தது.

முதுகிலே புத்தகப் பை ; கையிலே குடை— இந்தக் கோலத்தோடு, பள்ளிக்கூடத்தை நோக்கி வெகு வேகமாக நடந்து கொண்டிருந்தான் முத்து.

" தம்பி....!"—அந்த சமயத்தில் இப்படி ஒரு குரல் எழும்பியது. அந்தக் குரலில்தான் எத்தனை அன்பு ! பரிவு !

முத்து திரும்பிப் பார்த்தான். அவனுக்கு பின்னல் ஒரு மனிதர் வந்துகொண்டிருந்தார். அவர்தான் அழைத்ததோ? முத்து நின்றான். அந்த மனிதரின் வெற்றிலைக் காவி படிந்த பற்களெல்லாம் வெளியே தெரிந்தன; அப்படி சிரித்தார். அவர் ஏன் தன்னை அழைக்க வேண்டும்? ஏன் இப்படி சிரிக்க வேண்டும்? இது என்ன புதுமை!—இப்படி எண்ணினான் முத்து. "ஏன்? யாரைக் கூப்பிட்டீர்கள்?" என்று கேட்டான்.

"உன்னைத்தான் கண்ணு!" என்று சொன்னார் அந்த மனிதர். மறுபடியும் சிரித்தார். அதற்குள் முத்துவிடம் வந்துவிட்டார்.

"நீங்க யாரு? உங்களை நான் பார்த்ததே இல்லையே!"—வெடுக்கென்று கேட்டான் முத்து. பொல்லாத குறும்புக்காரனாயிற்றே, அவன்!

"சும்மாதான் கூப்பிட்டேன், தம்பீ! தனியா நடந்தேன்; என்னவோ போல இருந்தது; பேச்சுத் துணை தேடினேன்; நீ கிடைத்தாய்; அவ்வளவுதான். வா, போகலாம்!" என்றார் அவர். முத்துவும்கூட நடந்தான்.

சற்று நேரம் சென்றது.

"ஏன் தம்பீ, உன் வீடு எது?"—மெதுவாகக் கேட்டார் அந்த மனிதர்.

முத்துவுக்குப் பயமாக இருந்தது. 'பிள்ளை பிடிப்பவன்' என்பார்களே, அந்த மாதிரி மனிதரோ இவர்—என்று நினைத்தான். இருந்தாலும் இயல்பான துடுக்குத்தனம் போகுமா? திட்டிக் கொண்டிருக்கும் அப்பாவின் வாய்—அடிக்க வரும் அம்மாவின் கை—பாய்ந்து வரும் ஆசிரியரின் பிரம்பு — இவை அனைத்துமே பின் வாங்கிவிடுமே சுட்டித்தனத்தில்—வேடிக்கைப் பேச்சில்! இந்த மனிதர் எம்மாத்திரம்?

"அதோ, அந்தக் கோடியிலே இருக்கே, அந்த மஞ்சள் மாடி வீடுதான் எங்க வீடு!" என்ருன்.

"ஓகோ! ஆமாம் தம்பீ; நீ மட்டும் தனியா படிக்கப்போறியே, உனக்கு அண்ணன் 'கிண்ணன்' இல்லியா?" — மறுபடி புதுக் கேள்வி போட்டார் அவர்.

'இவர் ஏன் இப்படியெல்லாம் கேட்க வேண்டும்? —சிரித்து சிரித்தல்லவா விஷயங்களைக் கிரகிக்கிருர்!' — என்று யோசித்தான் முத்து. ஏதோ முடிவு செய்தான். பதிலும் சொன்ஞன்.

"கிண்ணன் யாருமில்லே; ஆனல் மூன்று அண்ணன் இருக்காங்க! எல்லோரும் 'காலேஜி'லே படிக்கிருங்க. ஒரு அண்ணன் சென்னையிலே—அடுத்த அண்ணன் சிதம்பரத்திலே — கடைசி அண்ணன் கும்பகோணத்திலே—போதுமா?" என்று சொன்ஞன்.

"ஆமாம்! ஏன் இப்படி தனித்தனி ஊரிலே படிக்கிருங்க?"

"ஏஞ? மூணு பேரும் எப்பப் பார்த்தாலும் சண்டை போட்டுக்குவாங்க; அதஞலேதான் எங்க அப்பா இந்த வேலையைச் செய்தாங்க!"

"ஓகோ; அப்படியா? போகட்டும். ஏன் தம்பி; உனக்கு அக்கா யாரும் இல்லையா?"

"இல்லேன்னு யாரு சொன்னது? மூன்று அக்கா இருக்காங்களே! ஒரு அக்கா இந்தி படிக்குது; இன்ஞெரு அக்கா 'தமிழ் வித்வாஞ'க்காக படிச்சுக் கிட்டிருக்கு; கடைசி அக்கா 'மெட்ரிக்' பரீட்சை எழுதப் போவுது, இந்த வருஷம்!...."

"சபாஷ்! உங்க வீட்டிலே எல்லாரும் நல்லா படிக் கிருங்க போலிருக்கே! அப்படித்தான் இருக்கணும்!"

"ஆமாம்; எங்க அப்பா, அம்மா ரெண்டு பேருமே படிச்சவங்களாச்சே, அதனாலேதான்!"

"அடடா! கேட்க மறந்துட்டேனே; உங்க அப்பா யாரு? அவருக்கு என்ன வேலை?"

"தெரியாதா உங்களுக்கு? இந்த ஊருக்கு புதிசு போலே யிருக்கே!"

"ஆமாம் தம்பி; இப்பத்தான் ரயிலைவிட்டு இறங்கி வர்ரேன்?"

"ஓகோ, அப்படியா? எங்க அப்பா இந்த ஊர் சர்க்கார் வக்கீல்! இன்னும் ரெண்டு மாதத்திலே 'மாஜிஸ்ட்ரேட்' வேலைக்குப் போகப் போறாங்க! ஐயையோ! சொல்லிட்டேனே! இது ரொம்ப ரொம்ப ரகசியமாச்சே! 'வெளியே சொன்னால் தோலை உறிச்சுடுவேன்'னு சொல்லி யிருக்காரே அப்பா. இதை நீங்க யாருக்கிட்டேயும் சொல்லிடாதீங்க ...?"

"நான் ஏன் தம்பி சொல்லப் போறேன். அதோ, இன்னும் கொஞ்ச தூரம் போனவுடன் எல்லாமே மறந்துடும்....அதிருக்கட்டும்; உங்க அம்மா என்ன படிச்சிருக்காங்க?...."

"பீ. ஏ! ஆனால் வேலைக்குப் போக மாட்டாங்க. வீட்டிலே இருந்து கதை எழுதுவாங்க. எல்லாப் பத்திரிகையிலும் வருமே! போன மாசம்கூட ஒரு நாவல் போட்டியிலே ஆயிரம் ரூபாய் பரிசு வாங்கினாங்க..... ரொம்ப நல்ல அம்மா! என்னை அடிக்கவே மாட்டாங்க...."

"ஊம்....அப்படியா? நீ அதிர்ஷ்டசாலிதான்! ஆமாம் தம்பி; உனக்கு தம்பி, தங்கை யாரும் இல்லியா?"

"இல்லியே! ஆனல் அடுத்த மாசம் எங்க அம்மாவுக்கு ஒரு குழந்தை பிறக்குமாம்! அது தம்பியோ — தங்கையோ — இப்ப எப்படித் தெரியும்?"

பள்ளிக்கூடம் நெருங்கிவிட்டது!

"நீ ரொம்ப நல்ல தம்பி! நான் போகட்டுமா?"— என்று நகர்ந்தார், அந்தப் புதிய மனிதர்.

"என்ன சார், இவ்வளவு தூரம் உங்களோடு பேசிக்கிட்டு வந்தேன்; சும்மா போறீங்களே! அதோ அந்தக் கடையிலே ஒரே ஒரு பலூன் வாங்கித் தாங்களேன்!" என்ருன் முத்து, குறும்பாக!

அந்த மனிதர் யோசிக்கவில்லை. கடைக்குப் போனர். பெரிய பலூன் ஒன்று வாங்கினர். முத்து விடம் தந்தார். அவனுக்கு ஏக மகிழ்ச்சி! பள்ளிக்குள் ஓடினன். அந்த மனிதரும் நடந்தார்.

* * *

மாலை நேரம்!

மணி மூன்றரை!

'டிரில்' ஆசிரியர் பள்ளிக்கு வரவில்லையாம்; அதனல் முத்து பள்ளி முடிவதற்கு முன்னேயே வீட்டுக்குத் திரும்பினன்.

வாசலில் அடி வைத்ததும் உள்ளே ஏதோ புதிய குரல் கேட்டது. நின்ருன். கவனித்தான். வேறு யாருடைய குரலுமல்ல அது; பள்ளிக்குச் செல்லும் போது அவனுடன் பேசிக்கொண்டு வந்தாரே, அந்தப் புதிய மனிதருடையதுதான். முத்துவுக்கு 'திக்' கென்றது. உற்றுக் கேட்டான்.

"ஆகா! என்ன அருமையான கை! நானும் ஐம்பது வருடமாக உலகம் முழுதும் சுற்றுகிறேன்; ரேகை பார்க்கிறேன்; இப்படி ஒரு யோகக் கையைப் பார்த்ததேயில்லையே!"—

ஆமாம்! அந்த மனிதருடைய குரலேதான் அது!

" சரிங்க! எனக்கு எத்தனை பிள்ளைகள்? கொஞ்சம் பார்த்துச் சொல்லுங்கள், பார்ப்போம்!" — இது அப்பாவின் குரல்!

" குழந்தைகளா? அதற்கென்ன பஞ்சம்?........ பொருட்செல்வம் மட்டுமல்ல; மக்கள் செல்வமும் குறைவில்லையே உங்களுக்கு!........நான்கு பிள்ளைகள்! ஆமாம்........நான்கு!........மூத்தவர் மூவரும் வெளியூர் 'காலேஜ்'களில் படிக்கிறார்கள்! இளையவன்-சிறியவன் உள்ளூரிலே படிக்கிறான்! அது மட்டுமா? அதோ, அந்த ரேகை என்ன சொல்கிறது தெரியுமா? கருத்தோடு படிக்கும் மூன்று பெண்களும் உண்டு உங்களுக்கு......"

" என்ன? என்ன? ....."

" அது மட்டுமா? கடைசியில்........அடுத்த மாதம் பதிமூன்றாம் தேதி, நள்ளிரவு, ஒரு மணிக்கு இன்னுமொரு பெண்ணும் பிறக்கப் போகிறது. ராசாத்தி மாதிரி! அது நடனம் கற்றுக்கொண்டு உலகத்தையே ஆட்டிவைக்கப் போகிறது!"

" சரி........இருக்கட்டும்........என் தொழில் நிலைமை எப்படியிருக்கு? கொஞ்சம் பாருங்க!"

" ஆகா....ஆகா! என்ன ரேகை! என்ன ரேகை! ஐயா, வக்கீலையா, இன்னும் இரண்டே மாதத்திலே— ஏன், இன்றிலிருந்து ஐம்பதாவது நாள் நீங்கள் 'மாஜிஸ்ட்ரேட்' ஆகப்போகிறீர்கள். மேலிடத்திலே பேச்சு நடக்கிறது "

" ஓகோ!.......அப்படியா?........அப்புறம்?........"

" அப்பப்பா! என்ன அருமை! என்ன சொல்வதென்றே புரியவில்லையே எனக்கு! பிறந்தாலும் இப்படியல்லவா பிறக்கவேண்டும்! உங்கள் மனைவி

எழுதிய கதை ஒன்றுக்கு யோகம் வருகிறது! பெருத்த யோகம் ஓடி வருகிறது! போன மாதம் ஆயிரம் ரூபாய் பரிசு தந்ததே ஒரு நாவல்—அது இன்னும் ஆயிர மாயிரமாகக் குவிக்கப்போகிறது.... அதை சினிமாவாக எடுக்க ஒரு பிரபல கம்பெனி யோசனை செய்து கொண்டிருக்கிறது........இன்னும் இரண்டு நாளில்...."

அந்தப் புதிய மனிதர்—ஆச்சரியம், சிரிப்பு இவை பொங்க பேசிக்கொண்டே யிருந்த சோதிடர் தன் பேச்சை முடிக்கவில்லை....

"பளார்" என்று ஒரு சப்தம் எழும்பியது.

என்ன அது? முத்து திடுக்கிட்டான்.

அதற்குள் "ஐயோ ஐயா! என்னை ஏன் அடிக்கிறீர்கள்?" என்ற அலறல் எழும்பியது; சோதிடர் கதறினர்.

"ஏன் அடிக்கிறேனு? சோம்பேறிக் கழுதை! உன்னைத் தூக்கிலே அல்லவா போடவேண்டும்! ரேகை பார்க்கிறுனும், ரேகை! பதினைஞ்சு வருஷம் தவம் கிடந்து, 'ஒண்ணே ஒண்ணு; கண்ணே கண்ணு'ன்னு ஒரு பையன் பிறந்தான்.... எட்டு பிள்ளைக்கு கணக்கு சொல்லுகிருன், முட்டாள்! ....ஏய்; நான் வக்கீலுன்னு ரேகை சொல்லுது? அட பாவி....நகைக் கடை நல்லமுத்துன்னு ஊர் முழுதும் தெரியும்... என்னை வக்கீலாக்கிட்டியே நீ!—ம்...."

மறுபடி ஒரு குத்து விழுந்தது!

"ஐயோ! அப்ப நான் சொன்னதெல்லாம் பொய்யா?" சோதிடர் 'ஓ' என்று கத்தினர்.

"இல்லை; நூற்றுக்கு நூறு உண்மை! ஆனு—ஆவன்னு படிக்கத் தெரியாத என் மனைவியை கதாசிரியைன்னு சொன்னே பாரு முட்டாளே! ஓடு

இங்கிருந்து .... இல்லை மண்டையைப் பிளந்து விடுவேன்....ம்....ஓடு!....ஓடு !''—அப்பா கோபமாகக் கத்தினுர்.

"ஐயோ; போகிறேனே!'' என்று அலறிக் கொண்டே ஓடி வந்தார், சோதிடர்.

வாசலுக்கு வந்தார்.

'படார்' என்ற ஒரு சப்தம் கேட்டது. பயந்து விட்டார். பரபரப்புடன் பார்த்தார். அவர் வாங்கித் தந்த பலூன் வெடித்து விட்டது! 'கலகல'வென்று சிரித்துக் கொண்டு நின்ருன் முத்து.

சோதிடருக்கு எப்படி இருக்கும்? ஊரை ஏய்க்கப் புது வழி கண்டார் — உழைக்காமல் பிழைத்தார் — அப்படிப்பட்ட 'பகற் கொள்ளை'க்காரனுயிற்றே அவர், அவரையே ஏமாற்றிவிட்டானே முத்து! அவரது முகமூடியைக் கிழித்து எறிந்துவிட்டானே!

"நான் அப்பவே நினைத்தேன். இந்த ஆள் ஏதோ தப்பானவர் என்று. அதான் கேள்விக்கெல்லாம் 'டக்டக்'னு பதில் தந்தேன்; இல்லாததைச் சொன்னேன்—நல்ல பாடம் கற்பித்தேன்'' என்று முணுமுணுத்தான் முத்து. தெருக் கோடியில் ஓடிக் கொண்டிருந்த 'சோதிடரை'ப் பார்த்தான். சிரித்தான். வீட்டிற்குள் ஓடினுன்.





# மான்குட்டி

அருமையான மாலை நேரம்!

தெருக் கோடியிலே ஒரு பங்களா. அழகான பங்களா. பங்களாவைச் சுற்றி ஒரு தோட்டம். தோட்டத்தின் மூலையிலே ஒரு கிணறு; மொட்டைக் கிணறு. கிணற்றுக்குச் சற்று தூரத்திலே ஒரு மேடை; 'சிமிண்ட்' மேடை. அந்த மேடையிலே உட்கார்ந்திருந்தாள் ஒரு பெண். அவள்தான் சூடாமணி.

மேடைக்குச் சற்று தூரத்திலே அடர்ந்து படர்ந்து கிடந்தன, பசுமையான புற்கள். அங்கே மேய்ந்து கொண்டிருந்தது, ஒரு மான்குட்டி ; சின்னஞ் சிறு புள்ளிமான்குட்டி.

சூடாமணி அணிந்திருந்தது ஒரு பழைய சட்டை ; கட்டியிருந்தது, ஒரு கந்தல் பாவாடை. அவள் ஒரு ஏழைப் பெண். ஆமாம்; வேலைக்காரப் பெண். அந்த பங்களாவின் சொந்தக்காரர் இருக் கிறரே ; அவருடைய ஆறு வயதுப் பெண் ராணியைப் பார்த்துக்கொள்ளவேண்டியது அவள் வேலை.

ராணி, சூடாமணிக்குப் பக்கத்திலே உட்கார்ந்து கொண்டிருந்தாள். அவள் கையிலே ஒரு ரொட்டித் துண்டு இருந்தது. ரொட்டித் துண்டைக் கடித்துக் கொண்டிருந்த ராணி, மான்குட்டியைப் பார்த்தாள். உடனே ரொட்டித் துண்டை வீசி எறிந்தாள். மேடையி லிருந்து கீழே குதித்தாள். புள்ளிமானைப் போல, மான்குட்டியை நோக்கித் துள்ளி ஓடினுள்.

சூடாமணி அதை கவனிக்கவில்லை. அவளது மனம் எங்கெங்கோ அலைந்துகொண்டிருந்தது. 'பெற்ற அப்பா, அம்மா இருந்தால்.......நான் இப்படி வேலைக் காரப் பெண்ணுகப் பிழைக்க நேர்ந்திருக்குமா ?' என்று எண்ணினுள்.

அப்படியானுல் அவளுடைய அப்பா எங்கே ? அம்மா எங்கே ? இருவரும் இவ்வுலகத்திலேயே இல்லை. அவளைத் தனியாகத் தவிக்க விட்டுவிட்டு இறந்துபோய்விட்டார்கள். அப்பா, அம்மாவை நினைத்ததும் சூடாமணி சிலைபோல் உட்கார்ந்து விட்டாள்.

ராணி மான்குட்டியின் அருகிலே சென்ருள். அதன் கழுத்தை வளைத்து நெற்றியில் ஒரு முத்தம் கொடுத்தாள். 'கலகல'வென்று சிரித்தாள். அவளது

சிரிப்பு ஒலியைக் கேட்ட மான்குட்டி மிரண்டது. மிரண்டு ஓடத் தொடங்கியது. ராணியா விடுபவள் ? அதன் கழுத்தில் கட்டப்பட்டிருந்த கயிற்றின் நுனியைப் பற்றிக்கொண்டாள். மான்குட்டி ஓடத் தொடங்கியது. ராணியும் பின்னுல் ஓடினுள். கயிற்றின் முனைதான் அவள் கைகளிலே இருக்கின்றதே!

பாவம் சூடாமணி, இவை ஒன்றையும் அவள் கவனிக்கவே இல்லை.

ராணியும், மான்குட்டியும் வெகு மும்முரமாக 'ஓட்டப் பந்தயம்' நடத்திக் கொண்டிருந்தார்கள். மான்குட்டி பாய்ந்து ஓடியது. பின்னுல் தொடர்ந்து ஓடினுள் ராணி.

ஓட்டம் வலுத்தது.

மான்குட்டி துள்ளித் துள்ளி கிணற்றடியை அடைந்தது. கிணற்றைச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டு ஓடியது. ராணியும் விடவில்லை. பின்னுலேயே சுற்றினுள்.

அப்போதுதான் அந்தக் காட்சியைக் கண்டாள், சூடாமணி. உடனே, பதை பதைத்து எழுந்தாள். "ராணீ! ராணீ! மான்குட்டியை விட்டுவிடு!" என்று கத்தினுள்.

அவளது கதறல் பலன் தரவில்லை. அதற்குள் — ஓடிக் களைத்துப் போன மான்குட்டி அந்த மொட்டைக் கிணற்றைத் திடீரென்று குறுக்கே தாவியது. ஒரே தாவல்—தாவி ஓடிவிட்டது. அது தாவும் போதாவது ராணி, தன் கையிலிருந்த கயிற்றை விட்டுவிடக் கூடாதா? விடவில்லை. அதனுல் கிணற்றை அவளும் தாண்ட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு விட்டது! ஆனுல், மான்குட்டியைப் போல அவளால் தாவமுடியுமா? யாரால் தான் அது இயலும்!

அதுவும் ஆறு வயதுப் பெண்ணையிற்றே அவள்! ராணியும் தாவினுள். மறுகணம் 'ஐயோ' என்ற அவளது அலறல் கேட்டது. தொடர்ந்து 'தொப்' என்ற ஒலியும் எழும்பியது. ஆமாம்; ராணி கிணற்றுக்குள் வீழ்ந்துவிட்டாள்.

அதைக் கண்ட சூடாமணி திடுக்கிட்டாள். பயங்கரமாக அலறினுள்.

அவளுடைய அலறல் பங்களாவிலிருந்த எல்லோருடைய காதுகளிலும் வீழ்ந்திருக்கத்தான் வேண்டும். எல்லோரும் தோட்டத்திற்கு ஓடி வந்தார்கள். ஒரே பரபரப்பு!

சூடாமணி மறுபடியும் கத்தினுள். "ஐயையோ! ராணி கிணற்றுக்குள்ளே!...." அதற்குமேல் அவளால் பேச முடியவில்லை.

மறுகணம், வேலை ஆட்களில் ஒருவன் வேகமாக கிணற்றுக்குள் இறங்கினுன்.

'அடிப் பாவி! என் குழந்தையைக் கொன்றுவிட்டாயாடி!" என்று அலறினுள் ராணியின் அம்மா— சூடாமணியின் எசமானி அம்மா!

சூடாமணி தலையைக் குனிந்து கொண்டாள். அவள் கண்கள் கலங்கின. அப்போதுதான் கிணற்றிலிருந்து மேலே வந்தான் வேலைக்காரன். அவன் கையில் ராணியின் துவண்ட உடல் இருந்தது. அதைப் பார்த்தாள் சூடாமணி. உடனே "ராணீ!" என்று உரக்கக் கத்தினுள்.

மறுகணம் அவள் முதுகிலே 'பளீர்!' என்று ஓர் அடி விழுந்தது. சூடாமணி அலறினுள். பின்னல் திரும்பினுள். ராணியின் அப்பா கோபம் கொந்தளிக்க அங்கே நின்று கொண்டிருந்தார்.

அவர் கண்கள் கிணற்றடியை நோக்கின. எதையோ கண்டார்; திடுக்கிட்டார்; பாய்ந்து எடுத்தார். அது கொலுசு! ராணியின் கால் கொலுசு களில் ஒன்று!

அப்பா அந்த வெள்ளிக் கொலுசைப் பார்த்தார்; ராணியின் பயந்த முகத்தைப் பார்த்தார்....... "ஏண்டி, திருட்டுக் கழுதை! குழந்தையின் கொலுசைக் கழட்டிக் கொள்ளலாம்; கிணற்றிலே தள்ளி விடலாம்; கொன்று விடலாம் என்று எத்தனை நாட்களாகக் காத்துக் கொண்டிருந்தாய்?" என்று உறுமினர்.

"ஐயையோ! என்ன இது? எனக்கு ஒன்றுமே தெரியாதே!" என்று பயந்துகொண்டே கூறினள் சூடாமணி.

"தெரியாதா?" என்று கர்ஜித்தார் அப்பா. சிறிது தூரத்திலே கிடந்த கம்பு ஒன்று அப்போதுதான் அவரது கண்களிலே தென்பட்டது. ஓடிப்போய் அதை எடுத்தார்; திரும்பி சூடாமணியின் அருகே வந்தார்; கம்பை ஓங்கினர்; அவளை வேகமாக அடித்தார்; கோபமாக அடித்தார்; அடித்துக்கொண்டே இருந்தார். சூடாமணியின் உடல் வாட, இரத்தம் கசிய, இரக்கமே இல்லாது அடித்துவிட்டார்.

அடிதாங்காமல் துடித்தாள் சூடாமணி. என்ன பலன்? துவண்டுபோன அவளது பச்சை உடல் கீழே விழுந்தது. அவள் மூர்ச்சை ஆனாள்!

நீங்களே தான் சொல்லுங்களேன்; சூடாமணியா ராணியைக் கிணற்றில் தள்ளினள்? இல்லையே! பின்......அந்தக் கொலுசு? .......

ராணி மான்குட்டியைத் தொடர்ந்து ஓடும் போது, அது தானகவே கழன்று கீழே விழுந்து விட்டது. அதை எப்படி அறிவார் ராணியின் அப்பா! கோபத்தில்

அவருக்கு யோசிப்பதற்குக்கூட நேரமில்லையே! சற்று நேரத்தில் அந்தத் தோட்டத்திலிருந்து எல்லோரும் வெளியேறி விட்டார்கள், ராணியுடன். ஆனால் சூடாமணியை யாரும் கவனிக்கவேயில்லை! அவள் தோட்டத்திலேயே கிடந்தாள்!

நன்றாக இருட்டி விட்டது. சூடாமணி மெதுவாகக் கண்களைத் திறந்தாள். சுற்று முற்றும் பார்த்தாள். பங்களாவின் விளக்குகள் 'பளிச்' சென்று எரிந்து கொண்டிருந்தன. சூடாமணி மெதுவாகத் தலையை அசைத்தாள். எழுந்திருக்க முயன்றாள். கடினமாகத் தான் இருந்தது. மெதுவாக முழங்கால்களைப் பிடித்துக் கொண்டு ஒரு வழியாக எழுந்து விட்டாள். பங்களாவின் அருகே வந்தாள். உள்ளேஏதோ பேச்சுக் குரல் கேட்டது. உற்றுக் கேட்டாள்.

"அதெல்லாம் கொஞ்சம்கூட பயப்பட வேண்டாம். குழந்தை நாளைக்கே ஓடியாடி விளையாட ஆரம்பித்து விடும்!"

அது டாக்டரின் குரல் "அப்பாடா! நல்லகாலம்!" என்று சூடாமணி முணுமுணுத்தாள். அங்கேயே சிறிது நேரம் நின்றாள்.

அப்போது பங்களாவின் வாசலிலிருந்து டாக்டரின் கார் புறப்பட்டது. அவரை வழி அனுப்பி வைத்துவிட்டு உள்ளே நுழைந்தார் ராணியின் அப்பா!

சூடாமணிக்கு அதற்கு மேலும் அங்கு நிற்கப் பிடிக்கவில்லை. 'நல்ல வேளை ராணி பிழைத்துக் கொண்டு விட்டாள். அதுவே போதும்' என்று எண்ணினாள். மெதுவாக நகர்ந்தாள் நடந்தாள்; தள்ளாடியபடியே நடந்தாள், அவள் எங்கே போகிறாள்? இதென்ன கேள்வி—இனி அவளுக்கு அங்கென்ன வேலை? சூதுவாதற்று சொந்த வீடுபோல் அங்கே வேலை செய்தாள். இப்போது 'சந்தேகம்'

இடையிலே வந்து புகுந்து விட்டதே! இனி பாசம் ஏது? பந்தம் ஏது? அங்கு இடம்தான் ஏது?

சூடாமணி போய்விட்டாள்!

*  *  *

ஆறு மாதங்கள் சென்று விட்டன!

ஒரு நாள் மாலை நேரம்—அன்று கடற்கரையில் ஒரே கூட்டம். ஏனென்றால் அன்று ஞாயிற்றுக் கிழமை!

அந்தக் கூட்டத்தின் நடுவே "கதம்பம்! கதம்பம்!" என்று கூவியபடியே அலைந்து கொண்டிருந்தாள் ஒரு பெண். அவளது கையிலே பூக்கூடை ஒன்று இருந்தது. கூட்டத்திற்குள் புகுந்து புகுந்து வியாபாரம் செய்து கொண்டிருந்தாள், அவள்.

எங்கெங்கோ அலைந்து விட்டு கூட்டம் இல்லாத ஒரு மூலைக்கு வந்தாள். கையிலிருந்த சில்லரைகளை எண்ணிக் கொண்டேயிருந்தாள்.

அப்போது "ஏ, கதம்பம்!" என்று அவளை யாரோ அழைத்தார்கள்.

உடனே பூக்காரப் பெண் திரும்பினாள். அழைப்பு வந்த இடம் நோக்கி நடந்தாள்.

"அசல் தஞ்சாவூர் கதம்பமுங்க......முழம் முக்காலணா...... அல்லது அஞ்சு புதுக்காசு........என்று சொல்லிக்கொண்டே எதிரே பார்த்தாள். ஏனோ திடுக்கிட்டாள்.

அவளது முகத்தைப் பார்த்ததும் "சூடாமணி! சூடாமணி!" என்று ஆசையுடன் கத்திக்கொண்டே ஓடிவந்தாள், அங்கே இருந்த ஒரு பெண். கண நேரம்தான்—அப்படியே இருவரும் கட்டிப்பிடித்துக் கொண்டார்கள்.

கடற்கரையில் இருந்த பெண் வேறு யாருமல்ல; சூடாமணியின் பழைய சின்ன எசமானி ராணியே

தான்! அந்தக் காட்சியைக் கண்டதும் பக்கத்திலிருந்த ராணியின் அப்பா உடனே எழுந்தார். சூடாமணியின் அருகே ஓடி வந்தார்.

"சூடாமணி! நான் ரொம்பவும் பொல்லாதவன். அன்று உன்னை அநியாயமாக அடித்து விட்டேன். மிருகம்போல் நடந்து விட்டேன். ஆனால், மறுநாள் உடம்பு சற்று குணமானதும் தான் ராணி எல்லா விபரங்களையும் சொன்னாள். உண்மை தெரிந்தது. நான் உன்னைத் தேடினேன். ஆனால் நீ அகப்பட வில்லை. ராணியோ உன்னைக் காணாமல் கலங்கினாள்; உன் நினைவாகவே எப்போதும் வாடினாள்; எப்படி யாவது உன்னைக் கண்டு பிடித்துவிட வேண்டும்; அழைத்து வந்துவிட வேண்டும் என்று எங்கெங்கோ தேடினோம். பலனே இல்லை. ராணி உன் பிரிவைத் தாங்காமல் தூக்கத்தில்கூட புலம்பினாள்; பிதற்றினாள்; இன்று தான் உன்னைக்கண்டு பிடித்தோம். நடந்ததை மறந்துவிடு, சூடாமணி! மறுபடியும் எங்கள் வீட்டிற்கு வா!" என்று கண்கலங்கக் கூறினார், ராணியின் அப்பா.

"ஆமாம் சூடாமணி! வந்துவிடு! இனிமேல் நீ என்னை விட்டு ஒருக்கணமும் பிரியக்கூடாது! போகலாம், வா!" என்றாள் ராணி. சூடாமணியின் கையைப் பிடித்து இழுத்தாள்.

உடனே சூடாமணி பூக்கூடையிலிருந்து இரண்டு முழம் பூவை எடுத்தாள். அழகாக மடித்தாள். ராணியின் தலையிலே சூட்டினாள். பிறகு, ராணியின் அப்பாவைப் பார்த்தாள். "நான் இப்போது ஒரு பூக்கடைக்காரத் தாத்தாவிடம் இருக்கிறேன். அவர் என்னைத் தன் 'பேத்தி'யைப்போல் ஆசையோடு வளர்த்து வருகிறார். நான் அவரை விட்டுப் பிரிய மாட்டேன் என்று உறுதி தந்திருக்கிறேன். அவரை விட்டு விட்டு நான் எப்படி உங்களோடு வருவது? அவரது அன்பு என்ன ஆவது? அவருக்கு நான்

துரோகம் செய்யவிரும்பவில்லை. என்னை மன்னித்து விடுங்கள்!'' என்று கூறினாள். வேகமாகத் திரும்பினாள்; ' விறு விறு ' என்று நடந்து போய்விட்டாள்.


'' சூடாமணி !'' என்று ஆசையோடு அழைத்தாள், ராணி!

'' சூடாமணி! சூடாமணி!'' என்று ராணியின் அப்பாவும் அன்பாக அழைத்தார்.

சூடாமணி திரும்பிப் பார்க்கவும் இல்லை; நிற்கவும் இல்லை; நடந்துகொண்டேயிருந்தாள்.

அவள் போவதையே பார்த்துக் கொண்டிருந்த ராணி, அப்பா இருவர் கண்களிலும் கண்ணீர் ததும்பிக் கொண்டிருந்தது.





# காற்றாடி

காற்று ‘ஜிலு ஜிலு’ என்று வீசிக்கொண்டிருந்தது. நேரமோ மாலை; இடமோ ஆற்றங்கரைத் திடல். கேட்க வேண்டுமா? ‘பாலர் பட்டாளம்’ கூடியிருந்தது, அழகான பட்டங்களுடன்.

“அப்பப்பா! நான் அழகாகத்தான் இருக்கிறேன். எத்தனை கவர்ச்சி! இத்தனைப் பட்டங்களுக்கும் நானே தான் ராஜா” என்று முணுமுணுத்தது ஒரே ஒரு பட்டம். அழகான கருப்புக் காகிதம்—அதிலே வட்ட வட்ட கருப்புப் புள்ளிகள் — உண்மையிலேயே

அழகாகத்தான் இருந்தது, அது. ஆனாலும் கர்வம் இருக்கலாமா? கூடாதல்லவா! ஆகவே மற்ற பட்டங்கள் எல்லாம் அதை வெறுப்புடன் பார்த்தன.

“என்ன இருந்தாலும் இந்த கர்வம் கூடாதப்பா!” என்றது ஒரு பச்சைப் பட்டம்.

“போகட்டும்; நமக்கென்ன வந்தது!” என்றது ஒரு பட்டம். அது வெள்ளைப் பட்டம். அதற்கு சண்டை பிடிக்கவே பிடிக்காது. சமாதான விரும்பி.

அந்தக் கருப்புப் பட்டம்தான் உயர- உயர பறந்து கொண்டு சென்றது. அதைப் பறக்கவிட்டவன் ராஜா. பெயருக் கேற்றபடியே அவன் பணக்கார வீட்டுத் தம்பி. அவனுக்குக் கொள்ளை மகிழ்ச்சி! பட்டத்திற்கென்று அவன் எவ்வளவு செலவு செய் திருக்கிறன்! எவ்வளவு அதிகம் நூல் வாங்கி இருக்கிறன்! அப்பாவிடம் கேட்பான். மனம் கோணமல் பணம் கொடுப்பார். அவன் எந்த ‘நூலோ’ வாங்கிப் படிப்பதற்குப் பதிலாக இந்த நூலை வாங்கிக் குவித்திருந்தான்.

ஐயோ பாவம், எவ்வளவு யோசனை இல்லாத செய்கை! இருந்தாலும் அவன் சிரித்தான். அவன் ஏற்றிய பட்டமும் சிரித்தது. சிரித்துக்கொண்டே பறந்தது, பறந்து கொண்டே உயர ஏறியது.

“ஆகா! ராஜாவின் பட்டம்தான்’டா வானத்தைத் தொடப் போவுது!” — ஆற்றுமணலில் குதித்துக்கொண்டே கத்தினன் ஒரு பொடியன்.

“ஆமாண்டா ஆமாம்! கருப்பு வர்ணம், சிவப்புப் புள்ளிகள் — எதுவுமே கண்ணுக்குத் தெரியாதுபோலிருக்கே! ஜோர்; ஜோர்!”—அதை ஆமோதித்தான் மற்றொரு குறும்புக்காரன்.

"பட்டம் கீழே இறங்குமா? அல்லது செயற்கைச் சந்திரன்போல ஆகாயத்திலேயே குடியேறிவிடுமா?" என்று கேலி செய்தான், ஒரு கிண்டல்காரன்.

ராஜாவுக்கோ தாங்க முடியாத மகிழ்ச்சி! பிறகு ராஜாவின் பட்டத்துக்குக் கேட்க வேண்டுமா? "நானே ராஜா" என்று கத்திக்கொண்டே பறந்தது. தனக்குக் கீழே — ரொம்ப ரொம்ப அடியில் பறந்து கொண்டிருந்த பட்டங்களைப் பார்த்தது. கிண்டல் செய்தது. கேலியாகச் சிரித்தது. இன்னும் பறந்தது. பறந்துகொண்டே யிருந்தது.

* * *

மாலை மங்கியது. இருள் 'வந்துவிடட்டுமா' என்று பயமுறுத்திக் கொண்டிருந்தது.

எல்லா பையன்களும் தங்கள் பட்டங்களைக் கீழே இறக்கினார்கள். ஆனால் ராஜாவுக்கோ தன் கருப்புப் பட்டத்தை இறக்கவே மனமில்லை. அதைப் போலவே அவனது பட்டத்திற்கும் கீழே இறங்கவே மனமில்லை!

வான மண்டலத்தில் தன்னிச்சையாக — துணை எவருமின்றி 'ராஜா'வைப் போலவே பறந்து கொண்டிருந்தது அப் பட்டம். திடீரென்று எதையோ கண்டு திகைத்தது. உற்று கவனித்தது. ஏதோ ஒன்று அதை நோக்கிப் பறந்துகொண்டு வந்தது. பட்டமோ என்று பார்த்தது. அல்ல; அல்ல; அது ஒரு ஊர்க்குருவி! கொட்டைப் பாக்கைப் போலிருந்த சின்னஞ் சிறிய குருவி!

தான் பறக்கும் உயரத்திற்கு அதுவும் பறப்பதா? இப்படி நினைத்தது பட்டம். அதற்கு பொறாமை பொங்கியது, "யாரப்பா நீ?" என்று சற்று இறுமாப்புடன் கேட்டது.

ஊர்க்குருவி அந்த மிரட்டலுக்கெல்லாம் பயப்படுமா? "நான் யாராயிருந்தால் என்ன? இப்போது உனக்கு புத்தி சொல்லவே வந்தேன். சீக்கிரம் கீழே இறங்கிவிடு. காற்று பலமாக வீசும்போல் இருக்கிறது!" என்றது.

பட்டம் உரக்கச் சிரித்தது. "அட முட்டாளே! என்னையா இறங்கச் சொல்கிருய்? இவ்வளவு பெரிய எனக்கு, கடுகளவு பறவை நீ புத்தி சொல்வதா? விந்தை; விந்தை! உன் உடலைப் பத்திரமாகக் காப்பாற்றிக்கொண்டு ஓடிவிடு! காற்றிலே தலை வேறு; இறக்கை வேருகச் சிதைந்து போய் விடாதே! நான் இன்னும் பறப்பேன், வேண்டுமானுல் வந்து பாரேன், என்னுடன் போட்டிக்கு!" என்று சொல்லி மீண்டும் சிரித்தது.

"போட்டிக்கா வருகிருய், முட்டாள் பட்டமே! நூலும் காற்றும் இல்லாவிட்டால் நீ பறக்கமுடியாது. தெரியுமா? ஆனுல் நானே சுதந்திரப் பறவை. இந்த வானம் தான் என் உலகம்!" என்று ஊர்க் குருவி சொன்னதும் பட்டத்திற்குக் கோபம் வந்து விட்டது.

ஊர்க்குருவி தன்னை அவமானப் படுத்துவதாக எண்ணிவிட்டது. தன்னுடைய அகண்ட உருவத்தை வேகமாக அசைத்தது. ஊர்க்குருவியை நோக்கி நகர்ந்தது. ஓங்கி அடித்தது. "போடா தம்பீ! பொல்லாத அறிவாளி நீ! உன் புத்தியும் யுக்தியும் யாருக்கும் தேவையில்லை! இந்த வான வெளிக்கு நான் ஒருவனேதான் ராஜா!" என்று கத்தியது.

அடியின் வலியைத் தாங்க முடியவில்லை ஊர்க் குருவிக்கு. அதற்கு அழுகையே வந்துவிட்டது. ஆனுலும் என்ன செய்ய முடியும்? துஷ்டரைக் கண்டால் தூர விலகத்தானே வேண்டும்; பேசாமல் கீழே இறங்கியது. பறந்தது.

"புத்தி சொல்ல வந்தாயே பெரிய மனிதனே! ஓடு! தலை தெறிக்க ஓடு!" — பட்டம் சிரித்துக் கத்தியது. மகிழ்ச்சி இன்னும் அதிகரித்தது. மேலும் உயரே ஏறியது.

* * *

இருள் பரவிக்கொண்டிருந்தது. காற்றும் வேகமாக வீச ஆரம்பித்தது. ஆற்று மணல் காற்றிலே பறந்தது. கண்களுக்குள் புக முயற்சித்தது.

"ராஜாவுக்கு பயம் தோன்றியது. பட்டத்தை வேகமாக கீழே இறக்க முயற்சித்தான். இரண்டு மணி நேரத்தில் மேலே ஏறிய பட்டமாயிற்றே; அவ்வளவு சுலபத்திலா கீழே இறக்கிவிட முடியும்?

காற்று 'ஹோ' என்ற இரைச்சலுடன் வீசியது. பையன்கள் எல்லோரும் பயந்து போனார்கள். வீடுகளுக்கு ஓடி விட்டார்கள். ராஜா மட்டும் தனியாக நின்றான். நூலை 'சர சர'வென்று இழுத்துக்கொண்டிருந்தான்.

வானத்திலோ காற்று பலத்துவிட்டது. பட்டம் தடுமாறியது. அங்கு மிங்கும் ஆடியது. அலைக் கழிந்தது. அதனால் தாங்க முடியவில்லை. "ஐயோ" என்று அலறியது. என்ன பலன்? ராஜாவால்தான் அதைக் கீழே இறக்க முடியவில்லையே!

புழுதி பறந்தது. சருகுகள் மிதந்தன. புயலைப் போல் மாறியது காற்று!

ராஜா பலம் கொண்டமட்டும் நூலைப் பிடித்து இழுத்துக்கொண்டிருந்தான். 'சடா'ரென்று அறுந்து விட்டது நூல்! மறுகணம் பயங்கர அலறலுடன் கவிழ்ந்தது பட்டம். திசை தப்பியது. வானத்திலே ஓடியது; எங்கேயோ ஓடியது. பொல்லாத காற்று அதை எங்கேயோ விரட்டி அடித்தது!

நன்முக இருட்டி விட்டது. குற்றுயிர்—குறை உடல் — இந்தச் சோகமான தோற்றத்தோடு ஒரு மரக் கிளையில் வந்து சிக்கியது பட்டம். அந்தக் கருப்புப் பட்டமே தான்! அதற்கு உடலெல்லாம் ஒரே வலி; "ஐயோ, .... அப்பா!" என்று அழுது கொண்டே தொங்கியது.

அதே நேரத்தில் அங்கு ஏதோ சப்தம் எழும்பியது. தனக்கு மறுபடியும் நல்ல வாழ்வு தர ராஜாதான் வந்துவிட்டானே என்று எண்ணியது கருப்புப் பட்டம். மெதுவாகத் தலையைத் தூக்கிப் பார்த்தது. ராஜா இல்லை. அவன் ஏன் அங்கு வரப்போகிருன்? அவனுக்கு என்ன அவ்வளவு அக்கரை? நாளைக்கு கடையிலே பணத்தை நீட்டினுல் புதுப் பட்டம் கிடைத்துவிட்டுப் போகிறது. அப்படி யானுல் என்ன சப்தம் அது? பட்டம் மறுபடியும் பார்த்தது. அந்த மரத்தின் கிளையில் ஒரு குருவிக் கூண்டு இருந்தது. அதிலே ஒரு ஊர்க்குருவி— பக்கத்தில் அதன் குஞ்சுகள்! பட்டம் திடீரென்று அதிர்ச்சி அடைந்தது. ஏன் தெரியுமா? சற்று நேரத் திற்கு முன்பு ஆகாயத்தில் எதனிடம் சவால் விட்டதோ; அதே ஊர்க்குருவிதான் அது!

அதே சமயம், "ஏனம்மா, தம்பி ஒன்று சொல் கிருனே; நீ கேட்டாயா? நம்மால் தான் வானத்தில் அதிக உயரத்தில் பறக்க முடியுமாமே; அது உண்மையா அம்மா?" என்று சந்தேகத்துடன் கேட்டது ஒரு ஊர்க்குருவிக்குஞ்சு!

ஊர்க்குருவி பேசியது; "அப்படி இல்லை, அந்த கர்வமும் கூடாது மகளே! இன்னும் எவ்வளவோ பறவைகள் இல்லையா; கருடன், பருந்து...."—பேசிக் கொண்டிருக்கும் போதே பரிதவித்துக் கொண்டிருந்த கருப்புப் பட்டத்தைப் பார்த்து விட்டது அது. "அதோ பாருங்கள் அந்தப் பட்டத்தை! அதன் கதை ரொம்ப


ரொம்ப சோகமானது; ஆனால் ரொம்ப ரொம்ப உபயோகமானது; நல்ல பாடம்! அது கர்வத்தால் அழிந்த விதத்தை நான் சொல்லட்டுமா?...''

இப்படிக் கேட்டவுடன் குருவிக்குஞ்சுகள் எதுவும் சொல்வதற்கு முன்னால் "வேண்டாம்; வேண்டாம்! என் கதையைச் சொல்லாதே! என்னை அவமானம் செய்யாதே!" என்று வேதனையோடு கத்தியது பட்டம்.

அதன் குரல்கூட வலுவற்றுவிட்டது. உடல்தான் சின்ன பின்னமாகி விட்டதே!

காற்று மீண்டும் வீசியது. பட்டம் மரத்தின் கிளையைவிட்டு விடுபட்டது. கீழே ஓடிக்கொண்டிருந்த ஆற்று வெள்ளத்தை நோக்கி ஓடியது. ஆற்றில் விழுந்தது. குலைந்தே போய்விட்டது!

"ஐயோ, சாகிறேனே!"—பட்டத்தின் இந்த சாவுக்குரல் மட்டும் ஊர்க்குருவி குடும்பத்திற்குத் தெளிவாகக் கேட்டது.





# முயல்குட்டி

"முயலே, முயலே, ஓடி வா
முன்னே பாய்ந்து ஓடி வா !
தயங்கித் தயங்கித் தூர நீ
தள்ளி நிற்க லாகுமோ ?
பயத்தை நீயும் விட்டிடு ;
பாய்ந்து முன்னே வந்திடு !"

என்ற பாட்டை முணு முணுத்துக்கொண்டே ஓடோடி வந்தாள், மங்களம். வாசலைக்கூட அவள் தாண்ட வில்லை. அங்கே ........ அவளுடைய ஆசை, அன்பு

எல்லாமே உருவான ஓர் உயிர் அவளுக்காகவே காத்துக்கொண்டிருந்தது.

அது ஒரு முயல்குட்டி! மங்களம் தன் கண்ணின் மணியைப்போல காத்து வளர்த்து வரும் அழகான முயல்குட்டி!

மங்களம் தன் புத்தகப் பையைக் கீழே வைத்தாள். பாய்ந்து சென்று முயலைத் தூக்கிக் கொண்டாள். ஆசையுடன் அதன் பஞ்சு மேனியிலே ஒரு முத்தம் கொடுத்தாள். ஒன்று என்ரு சொன்னேன். இல்லை; இல்லை. மாறி மாறிப் பல முத்தங்கள் கொடுத்தாள்.

"அடடா! மங்களம், போதும், போதும். உதடு வலிக்கப் போகிறதம்மா!" — அந்த சமயத்தில் இப்படி கிண்டல் செய்தது ஒரு குரல். அதைக் கேட்டாள் மங்களம். திடுக்கிட்டு உடனே திரும்பினாள். எதிரே நின்றுகொண்டிருந்தார் அவளுடைய மாமா ஜம்பு லிங்கம்.

"மாமா, எப்போது பம்பாயிலிருந்து வந்தீர்கள்? கடிதம்கூட போடவில்லையே!" என்று ஆவலுடன் கேட்டாள் மங்களம்.

"இப்போதுதான் வருகிறேன், மங்களம். கடிதம் போடுவதற்குக்கூட நேரமில்லை. அவசரமாய் புறப்படும் படியாகிவிட்டது!" என்றார் மாமா. "சரி, அந்த முயல்குட்டியைக் கீழே விட்டுவிட்டு உள்ளே வா!" என்றார்.

மங்களமோ முயல்குட்டியைக் கீழே விடவில்லை. கையிலேயே வைத்துக்கொண்டு மாமாவின் பின்னால் உள்ளே நுழைந்தாள். அங்கே மாமாவின் தோல் பெட்டி இருந்தது. அதைத் திறந்தார். உள்ளே யிருந்து ஓர் அழகான 'சில்க் கவுனை' எடுத்தார். அவள் கையிலே கொடுத்தார்.

மங்களம் பூரிப்போடு அதைத் தொட்டுப் பார்த்தாள். "அடடா! என்ன மாமா இது; என் முயல் குட்டியின் உடலைப்போல் வழவழவென்று இருக்கிறதே!" என்று வாயைப் பிளந்தாள்.

மாமா இலேசாகச் சிரித்தார். "பின் என்ன? உனக்கு வாங்கி வரும் அன்பளிப்பு என்றால் சாதாரண மானதாகவா இருக்கும். அது மட்டுமா? இதோ பாரேன், இன்னும்...... " என்று சொல்லிக்கொண்டே பெட்டியிலிருந்து என்னென்னவோ எடுத்தார், எல்லாம் அற்புதமான அழகான விளையாட்டுச் சாமான்கள். மங்களத்துக்கு ஒரே ஆனந்தம்!

"மங்களம், புறப்படு! நாம் போகலாம்!" என்றார் மாமா.

"எங்கே?......" என்று கேட்டாள் மங்களம்.

"எங்கேயா? நான் தமிழ் சினிமா பார்த்து எத்தனை தினங்களாகிவிட்டது தெரியுமா? ஏதோ ஒரு குழந்தைகளுக்கான படம் ஒன்று நடக்கிறதாம். வா, போய் பார்த்துவிட்டு வரலாம்!" என்று அழைத்தார் மாமா.

"இதோ வருகிறேன், மாமா!" என்று சொல்லிக் கொண்டே முயல்குட்டியைக் கீழே விட்டுவிட்டு அறைக்குள் ஓடினாள், மங்களம். சிறிது நேரத்தில் திரும்பியும் வந்தாள். இப்போது அவளது உடலை மாமா வாங்கி வந்து தந்த 'சில்க் கவுன்' அலங்கரித்துக் கொண்டிருந்தது.

மங்களம் தன் அப்பா, அம்மாவிடம் சொல்லிக் கொண்டாள். மறந்துவிடாமல் தன் அருமை முயல் குட்டியிடமும் விடை பெற்றுக்கொண்டாள். மாமா வுடன் சினிமாவுக்குப் புறப்பட்டுவிட்டாள்.

* * *

இரவு மணி பத்து இருக்கும். மாமாவும் மங்களமும் வீடு திரும்பினுர்கள். சாப்பிட்டார்கள்.

மாமா வந்ததில் மங்களத்துக்கு மட்டும்தானு மகிழ்ச்சி? அண்ணு வந்திருக்கிறுர் என்று அம்மாவுக்குக் களிப்பு; மைத்துனர் வந்திருக்கிறுர் என்பதை எண்ணி அப்பாவுக்குப் பூரிப்பு! ஆனுல் அந்த மகிழ்ச்சிக் கிடையே அம்மா சொன்ன ஒரு விஷயம்....?

"உங்களுக்குத் தெரியுமா? அண்ணுவுக்கு முயல்கறி என்ருலே அலாதி பிரியம்! ஆகையால் நாளைக்குக் கட்டாயம் வீட்டிலிருக்கிற முயல் குட்டியை விருந்து வைத்துவிட வேண்டும்!"

இந்த பயங்கரச் செய்தி மங்களத்தின் உள்ளத்தை உலுக்கிவிட்டது. அந்தக் கணம் முதல் அவள் சிரிக்கவும் இல்லை; பேசவும் இல்லை. அவள் மகிழ்ச்சியெல்லாம் எங்கேயோ ஓடி மறைந்துகொண்டது!

சற்று நேரம் சென்றது. எல்லோரும் படுக்கச் சென்ருர்கள். மங்களமும் படுத்தாள். மெத்தை முள்ளாக மாறி குத்தியது. அவள் கண்களை மூடவில்லை. தூங்கவில்லை. தூக்கம் எப்படி வரும்? அவளது எண்ணங்கள் எங்கோ சிறகடித்துப் பறந்து கொண்டிருந்தது. "ஆறு மாதமாக, நூற்றிஎண்பது நாட்களாக நான் ஆசையுடன்—அன்புடன் வளர்த்து வந்த முயல்குட்டி நாளைக்கு விருந்தாவதா? கொல்லப்படுவதா? கொன்று அதன் உடலை ருசி பார்ப்பதா? என்ன கோரமான செயல் அது!...." என்று அவளுடைய வாய் முணுமுணுத்தது. என்ன செய்வது இப்போது? அம்மாவிடம் போய் கேட்டால் என்ன? அப்பாவிடம் போய் கெஞ்சினுல் என்ன? தெரு வழியே குறவன் விற்றுக்கொண்டுபோன முயல் குட்டியை "அப்பா, வாங்கிக் கொடுங்கள்" என்று கேட்டவுடனேயே, வாங்கிக் கொடுத்தாரே;

இப்போது "அதன் உயிரைக் காப்பாற்றுங்கள்" என்று கெஞ்சினுல் உணர மாட்டாரா?" என்று எண்ணினுள்.

முடிவில் படுக்கையைவிட்டு எழுந்தாள்; நடந்தாள்; அம்மா படுத்திருந்த இடத்தை அடைந் தாள்; அரைத் தூக்கத்திலிருந்தாள் அம்மா. தட்டி எழுப்பினுள் மங்களம். தனது அருமை முயல்குட்டியின் உயிரைக் காக்க அம்மாவிடம் கெஞ்சினுள். அம்மா ஏதேதோ சமாதானம் கூறினுள். மங்களம் எவ்வளவோ சொன்னுள். அம்மாவின் மனம் மாறவே இல்லை.

மங்களமும் அம்மாவும் பேசிக்கொண்டிருக்கிற சப்தம் அப்பாவின் காதுகளில் நன்ருக விழுந்தது. உடனே அவர், "மங்களம்! பேசாமல் போய் படுக் கிருயா; இல்லையா? இதெல்லாம் என்ன செல்லம்?" என்று கோபமாகக் கத்தினுர்.

மங்களம் பேசாமல் திரும்பி வந்து படுக்கையில் படுத்து விட்டாள். அவள் மனம் படாதபாடு பட்டது. 'மாமா நல்லவர்தான். எனக்கு எவ்வளவோ பரிசுகள் வாங்கி வந்திருக்கிருர். நம் வீட்டிற்கு அவர் அடிக்கடி வருவதுகூட இல்லை; ஆண்டுக்கு ஒரு முறைகூட வருவதே அபூர்வம். என்னிடத்தில் அளவு கடந்த அன்பு உண்டு அவருக்கு! ஆனுல் அந்த அன்பிற்கு என் ஆசை முயல்குட்டியின் உயிரையே பலிதந்துவிடு என்ருல் முடியுமா? என் அருமை முயல் குட்டியை இழப்பதா? படுகொலை செய்துவிடுவதா?' என்று எண்ணி எண்ணி ஏங்கினுள் மங்களம். கண்ணீர் கரை புரண்டு ஓடியது.

இப்போது அவள் என்ன செய்யவேண்டும்? தீவிரமாக யோசித்தாள். ஏதோ ஒரு முடிவிற்கு வந்தாள். திடீரென்று படுக்கையைவிட்டு எழுந்திருக்க

முயன்றாள். கையைப் படுக்கையில் ஊன்றியபோது ஏதோ தென்பட்டது. பஞ்சோடு பஞ்சாக வழவழ என்று அது இருந்தது. அது வேறு ஒன்றுமல்ல; மங்களத்தின் முயல்குட்டிதான்! அவள் அதைக் கையிலே தூக்கிக்கொண்டாள்; மெதுவாக எழுந்தாள்; அடிமேல் அடிவைத்து நடந்தாள்; வாசல் கதவை நெருங்கினாள்; சப்தமின்றி திறந்தாள்; வெளியே வந்தாள்; கதவைச் சாத்தினாள்; தெருவில் இறங்கினாள்; வேகமாக நடந்தாள்.

ஏன்? எதற்காக?

மங்களத்தின் உடல் நடுங்கியது; பயத்தால் பதறியது. அந்த நள்ளிரவில் ஒரு பச்சிளம் பெண் தனியாக நடந்து செல்வதென்றால்..........? மங்களம் பயத்தைப் பொருட்படுத்தவில்லை. மனதைத் தைரியப் படுத்திக்கொண்டாள். மீண்டும் நடந்தாள். வெகு தூரம் நடந்துவிட்டாள். அந்த நீண்ட தெருவின் கோடியிலே ஒரு தோப்பு. அந்தத் தோப்பிற்குள் நுழைந்தாள் மங்களம். கொஞ்ச தூரம் நடந்தாள். நின்றாள். கையிலிருந்த முயல்குட்டியை நெஞ்சோடு அணைத்துக்கொண்டாள். அவளது கண்களி லிருந்து கண்ணீர் பெருகியது. அவள் வாய் முணுமுணுத்தது.

"என் ஆசை முயலே! உன்னை விட்டுப் பிரியப் போகிறேன் நான். கலங்காதே! இன்றுவரை உன்னை நான் என் உயிர்போல வளர்த்துவந்தேன். இனி மேலும் நீ என்னுடன் இருந்தால் உன் உயிருக்கு ஆபத்துதான்! நீ எங்காவது தப்பிப் போ! எப்படி யாவது சுகமாக வாழ்!" என்று தொண்டை தழதழக்க கூறினாள்.

முயல் குட்டியைக் கண்களில் ஒற்றிக்கொண்டாள். பிறகு கீழே இறக்கி விட்டாள். கண்ணீர் கலங்கத்

திரும்பினாள். வேகமாக நடந்தாள். அவள் மனதிலே எல்லையில்லாத கலக்கம் — முகத்திலே சொல்ல முடியாத துக்கம்.

* * *

பொழுது விடிந்தது !

" அடடா! முயலை எங்கேயோ காணேமே !" என்ற அப்பாவின் பரபரப்பு நிறைந்த இக்குரல்தான் மங்களத்தின் தூக்கத்தைக் கலைத்தது. ஆனால் படுக்கையை விட்டு எழுந்திருக்கவில்லை. கண்களை மூடியபடியே படுத்திருந்தாள். 'நல்லவேளை ; தப்பி விட்டது என் முயல்குட்டி' என்று மகிழ்ந்தாள்.

வெகு நேரம் தேடினார் அப்பா. அம்மாவும் சேர்ந்து தேடினாள். முயல் குட்டி கிடைக்கவே இல்லை. " சனியன், எங்கே தொலைந்ததோ ! அண்ணாவுக்குக் கொடுத்து வைத்தது அவ்வளவுதான் !" என்று அலுத்துக் கொண்டாள் அம்மா.

அம்மா ஏமாந்தாள் ; அப்பா அனுதாபப்பட்டார்; மாமாவோ இதைப்பற்றி நினைக்கவே இல்லை. ஆனால், மங்களமோ........

* * *

மணி பத்து இருக்கும். பள்ளிக்குப் புறப்பட்டாள், மங்களம். வாசலை அடைந்தாள். தெருவில் இறங்கினாள். ஆனால் வேகமாக நடைபோடும் அவளது கால்கள் திடுக்கிட்டு நின்றுவிட்டன. ஏன்? அவள் எதைக் கண்டு அப்படி நின்று விட்டாள் ?

அவளுடைய அன்பான முயல்குட்டியைக் கண்டுதான் அவள் திகைத்துவிட்டாள். தன்னை நோக்கி ஓடிவந்துகொண்டிருந்த முயல் குட்டியைக் கண்டுதான் அவள் பிரமித்துவிட்டாள்.

மங்களம் அதிர்ச்சி அடைந்தாள். புத்தகப் பை கை நழுவிக் கீழே விழுந்தது. "ஐயோ, முயலே! ஏன் வந்தாய்? இங்கு எதற்காக வந்தாய்? உடனே ஓடிப்போய்விடு; எங்காவது ஓடி உன் உயிரைக் காப்பாற்றிக்கொள்; ஓடு!" என்று அலறினாள். நன்றி மறவாது நாடி வந்தது முயல்; "ஓடிப் போ!" என்று உருக்கமாக வேண்டினாள். அவளது கூக்குரல் முயலின் காதுகளில் விழுமா, என்ன? அவளது வீடு நோக்கி அது பாய்ந்தோடி வந்தது.

அதே சமயம் பயங்கரமாக இரைந்துகொண்டே கனவேகத்துடன் ஓடிவந்து கொண்டிருந்தது ஒரு மோட்டார். முயலையும் நெருங்கிவிட்டது.

இன்னும் ஒரே வினாடி — முயல் மோட்டாரின் சக்கரத்திலே சிக்கிச் சிதையப் போகிறதே!

"ஐயையோ!" என்று அலறினாள் மங்களம். மறுகணம் தெருவிலே பாய்ந்தாள். முயலை நோக்கி ஓடினாள். தூக்கிக்கொண்டு அப்பால் நகர்ந்துவிட்டாள். நல்லவேளை, முயல் பிழைத்துவிட்டது! மோட்டாரின் சக்கரத்திற்கு இரையாகவில்லை! ஆனால்...... அப்பா, அம்மாவின் கண்களில் பட்டால் அது நிச்சயம் பிழைக்க முடியாதே!


கலங்கிய கண்களுடன் வீட்டின் வாசலைப் பார்த்தாள், மங்களம். அங்கே, அவள் ஓர் அதிசயத்தைக் கண்டாள்.

அப்பாவும் அம்மாவும் நின்றுகொண்டிருந்தார்கள். இதுதான் அதிசயமா? இல்லை; இல்லை! அவர்களுடைய நான்கு கண்களும் கண்ணீரைப் பெருக்கிக் கொண்டிருந்தன! ஆமாம்; மங்களத்தின் கூக்குரலையும் அங்கே நடந்த நிகழ்ச்சிகளையும் பார்த்துத்தான் அவர்களுடைய கண்கள் கலங்கிவிட்டன! அவர்களுடைய மனம் அந்த சில விநாடிகளில் அடியோடு மாறிவிட்டது!

அப்பா வாயைத் திறந்தார். "மங்களம்! உங்கள் இருவரிடையே பின்னிக் கிடந்த அன்பை நாங்கள் அறியாமல் போனோம்! ஆகா, முயலின் உயிரைக் காப்பாற்ற நீ எவ்வளவு துணிச்சலாக நடந்து கொண்டாய்?" என்று கூறினார். அதற்குமேல் அவர் பேசவில்லை; பேச முடியவில்லை!

அம்மா, உடனே முயல்குட்டியைக் கையில் வாங்கிக்கொண்டாள் பரிவோடு!

மங்களத்தின் கண்கள் அப்போது 'குப்'பென்று கண்ணீரைக் கக்கின. ஆனால் அது வேதனைக் கண்ணீரல்ல; ஆனந்தக் கண்ணீர்!





# மிட்டாய்க்காரன்

வாசலில் உட்கார்ந்திருந்தாள் வேணி. அவளைப் போன்ற சிறுமிகளும், சிறுவர்களும் தெருவில் ஓடியாடி விளையாடிக் கொண்டிருந்தார்கள். ஆனால் வேணிக்குமட்டும் என்ன வந்தது? ஏன் எதையோ பறிகொடுத்தவள்போல் அப்படி அமர்ந்திருக்கிறாள்?

சற்றைக்கொரு தரம் அவள் தெருமுனையை வெறிக்க வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தாள். ஏன்? யாருடைய வரவையோதான் அவள் அத்தனை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். சிறிது நேரம் சென்றது.

"மிட்டாய்! மிட்டாய்!" என்ற குரல் தெரு முனையில் கேட்டது. வேணி திடீரென்று எழுந்தாள். உற்றுக் கேட்டாள்.

தெரு முனையிலே ஒரு மிட்டாய்க்காரன் வந்து கொண்டிருந்தான். அவன் ஒரு நொண்டி. ஒரு கையில் ஊன்று கோலுடனும், இன்னொரு கையில் 'குச்சி மிட்டாய்கள்' சொருகிய ஒரு கம்புடனும் வேக வேகமாக வந்து கொண்டிருந்தான் அவன். காசை நீட்டி, "ஏய், மிட்டாய் கொடு!" என்று அதிகாரத்துடன் கேட்ட குழந்தைகளைக்கூட அவன் கவனிக்கவில்லை. அவன் வேகமெல்லாம் ஒரு திசையிலேயே இருந்தது.

வேணியின் முகத்தில் சிரிப்பு தவழ்ந்தது. அவள் காத்துக் கிடந்தது அவனுக்காகத்தானே?

அவன் வந்து விட்டான். "ஏ, மித்தாய் தாத்தா! ஏன் இன்னிக்கு இத்தனை நாழி?" என்று கோபத்துடன் கேட்டாள் வேணி. அது பொய்க் கோபம்!

மிட்டாய்க்காரக் கிழவன் சிரித்தான். பல்லெல்லாம் தெரிய சிரித்தான். "ஏன் பாப்பா, நீ ரொம்ப நேரமா காத்துக்கிட்டிருந்தியா?" என்று கேட்டான்.

'ஆமாம்' என்கிற பாவனையில் தலையை அசைத்தாள் வேணி.

மிட்டாய்க்காரன் மிட்டாய் ஒன்றை எடுத்தான்.

"தாத்தா! தாத்தா! இன்னிக்கு எனக்கு மித்தாய் வேண்டாம்!" என்றாள் வேணி அப்போது.

"ஏன் பாப்பா?"—தினம் தவறாது மிட்டாய் வாங்குவாளே வேணி; ஆனால் இன்றைக்கு மட்டும் என்ன நேர்ந்துவிட்டது? இந்த சந்தேகம் தோன்றியது மிட்டாய்க்கார கிழவனுக்கு!

வேணியின் முகம் திடீரென்று மாறியது. "இங்கே யாரு தாத்தா!" என்று தன் கையை விரித்துக் காட்டியது. வியர்வை படிந்திருந்த அதனுடைய பிஞ்சுக் கைகளில் எதுவுமே இல்லை. அதாவது, அந்தக் கையில் தினம் தவருது மாலை நேரத்தில் இடம்பெறும் 'காலணு' அப்போது இல்லை. "பாத்தியா தாத்தா, எங்கிட்ட காசு இல்லை. அம்மாவைக் கேட்டேன்; அப்பாவைக் கேட்டேன், யாருமே தரலே! அதனுல் மித்தாய் வேண்டாம்," என்ருள் வேணி. பாவம், அதன் குரல் தழதழத்துவிட்டது.

மிட்டாய்க்காரன் சிரித்துவிட்டான். வேணியிடம் காசில்லை; அதற்காக அவன் எடுத்த மிட்டாயை மீண்டும் வைத்துவிடவில்லை. வேணியிடமே கொடுத்தான். "காசு இல்லேன்னு பரவாயில்லை பாப்பா; சாப்பிடு!" என்ருன்.

வேணிக்குக் கொஞ்சம் தயக்கம்தான். இருந்தாலும், சாப்பிடாவிட்டால் அந்த மிட்டாய்க்காரனும் போவதாக இல்லை. கடைசியில் வேணி மிட்டாயைச் சாப்பிட்டாள். கிழவன் சிரித்தான், வேணியும் சிரித்தாள். அது மிட்டாயின் ருசியால் வந்ததல்ல; கிழவனின் பொக்கைவாய் சிரிப்புதான் அவளையும் சிரிக்க வைத்துவிட்டது.

கிழவன் "மிட்டாய், மிட்டாய்!" என்று கூவிக் கொண்டே போய்விட்டான். அவன் கண் மறையு மட்டும் பார்த்துக்கொண்டிருந்த வேணி வீட்டுக்குள்ளே ஓடிவிட்டாள்.

* * *

ஒரு நாள் அல்ல; இரண்டு நாள் அல்ல. அந்த மிட்டாய்க்கார நொண்டி அந்தத் தெருவிற்குள் அடியெடுத்து வைத்த நாள் முதல் ஒருநாள் கூட மிட்டாய் வாங்கத் தவறியதேயில்லை, வேணி. அந்த

மழலைச் செல்வத்தின் 'உளறல் மொழி'யை ரசித்துக் கொண்டே மிட்டாய் கொடுக்க அந்த நொண்டியும் தவறியதே கிடையாது. அவர்கள் வியாபாரமுறையிலேயா பழகினார்கள்? இல்லை; இல்லை! அதற்கும் அப்பாற்பட்ட ஏதோ ஒரு பாசப்பிணைப்பு அவர்களை ஒன்றாகச் சேர்த்திருந்தது.

"ஏன் தாத்தா, எங்க வீட்ல வண்டி இருக்கே, ஜல் ஜல்ன்னு போகுமே....ஏன் உனக்கு இல்லே?...." என்று கேட்பாள் வேணி.

கிழவன் சிரிப்பான். "எனக்கு அந்த வண்டி எல்லாம் வேண்டாம் கண்ணு! ஏன் தெரியுமா? அப்புறம் நானும் வண்டியிலேதான் போய்க்கிட்டிருப்பேன். உனக்கு யார் மிட்டாய் தருவா? என்னை யாரு சிரிக்க வைப்பா?" என்பான்.

"ஆமா ஆமா தாத்தா! உனக்கு வண்டியும் வேண்டாம்; கெண்டியும் வேண்டாம்!" என்று தலையை ஆட்டிக்கொண்டே சொல்வாள் வேணி.

"எனக்கு மாடும் வண்டியும் இருந்தா நான் ஏன் இப்படி மாடாய் உழைக்கவேண்டும்; ஓடாய்த் தேய வேண்டும்?" என்று முணுமுணுத்துக்கொண்டே சென்றுவிடுவான் நொண்டி.

இன்னுமொரு நாள் இப்படிக் கேட்பாள் வேணி. "ஏன் தாத்தா, நீ சாமி பார்த்திருக்கியா?"

"எந்த சாமி?" என்பான் கிழவன்.

"அதான் பெரிய கோயில்ல இருக்குமே! எங்கப்பாகூட மந்திரம் சொல்வார்; பூஜை எல்லாம் செய்வாரே! நான் பாத்திருக்கேனே! அது ரொம்ப ரொம்ப நல்ல சாமி! தினந்தினம் ராத்திரியிலே எங்கப்பாவுக்கு எத்தனை தேங்காய், பழமெல்லாம்

தருது தெரியுமா?'' என்று சொல்லுவாள் வேணி. அவளுடைய அப்பா பெரிய கோயில் குருக்கள். பாவம், அவர் திரைமறைவில் செய்யும் வேலைகளை எல்லாம் வேணியின் சூதறியா நெஞ்சு இப்படி பறைசாற்றும்.

அதைக் கேட்கும் கிழவன் "சாமியைப் பாக்கவோ —கோயிலுக்குப் போகவோ எனக்கெல்லாம் ஏதும்மா நேரம்?'' என்பான். நொண்டிக்கொண்டே சென்று மறைவான்.

இப்படி தினம் தினம் ஏதாவது பேசி கிழவனை சிரிக்க வைப்பாள்; அல்லது சிந்திக்க வைப்பாள் வேணி!

இப்படி இருந்து கொண்டிருக்கையில் தான் ஒரு நாள் கிழவனைக் காணோம். மாலை வந்தது; போனது. ஆனால் வழக்கமாக வந்து போக வேண்டிய கிழவன் எங்கே போனான்? வேணிக்கு ஒன்றுமே புரிய வில்லை. எத்தனை நேரம் தான் காத்துக் கிடக்க முடியும்? உட்கார்ந்து உட்கார்ந்து அலுத்து விட்டது. தன் கைக்குள் புதைந்து கிடந்த காலணாவை ஆயிரம் முறை திரும்பத் திரும்பப் பார்த்து விட்டாள். ஆனாலும் அவனைக் காணவே காணோம். வேணிக்கு அழுகை அழுகையாக வந்தது. இரவும் வந்து விட்டது. கிழவன் வரவேயில்லை. ஆனால் 'மிட்டாய், மிட்டாய்' என்று கிழவனின் குரல் எங்கேயோ ஒலிப்பதை கனவிலே கேட்டாள் வேணி.

மறுநாள் பொழுது விடிந்தது; பொழுது சாய்ந்தது வழக்கம்போல். ஆனால் கிழவனைத்தான் காணோம். இப்படியே நான்கு நாட்கள்! வேணி என்ன செய்வாள்? என்னவோ. ஏதோ என்ற பயம் அவள் உள்ளத்தில் குழப்பத்தை உண்டுபண்ணி விட்டது.

கிழவன் வராமலே போய்விடுவானா? ஐந்தாவது நாள் மாலை இந்த சந்தேகம் தோன்றிவிட்டது வேணிக்கு. காத்திருப்பதைவிட கிழவனைத் தேடியே போய்விட்டால் என்ன? கிழவனின் வீடு எங்கிருக்கிறது என்றும் அவளுக்குத் தெரியும். ஊர்க் கோடியிலே உள்ள குட்டைக்கு அருகிலே இருக்கிறது அவன் குடிசை. முன்பு ஒரு முறை வேணியின் தொல்லை தாங்காது அவனே சொல்லியிருக்கிறான். அந்த நினைவு வந்துவிட்டது வேணிக்கு. அப்புறமென்ன? வீட்டில் தேடுவார்களே என்ற எண்ணம் கூட தோன்றவில்லை. வேக வேகமாக நடக்க ஆரம்பித்தாள்.

இருள் சூழ்ந்துவிட்டது. குட்டைக் கரைக்கு வந்துவிட்டாள் வேணி. பக்கத்தில் நிறைய குடிசைகள் இருந்தன. வேணி கிழவனைத் தேடினாள். சற்று நேரம்தான் கிழவனைக் கண்டுபிடித்துவிட்டாள். "ஏ, மித்தாய் தாத்தா!" என்று கத்திவிட்டாள். கிழவன் ஒரு குடிசையின் வாசலில் படுத்திருந்தான். வேணி அவனை நோக்கி ஓட ஆரம்பித்தாள்.

தன்மேல் வந்து திடீரென்று விழுந்த வேணியைக் கண்டதும் திடுக்கிட்டுவிட்டான் கிழவன்.

"ஐயோ, என்ன பாப்பா இது? நீ எங்கேம்மா இங்கே வந்தே?" என்றான் படபடப்புடன்.

"போ தாத்தா! நீதான் எனக்கு மித்தாய் தரவே இல்லையே....அதான் நானே வந்துட்டேன்!" என்றாள் வேணி.

"அழாதே பாப்பா! எனக்கு நாலு நாளா உடம்பு சரியில்லே! நாளைக்கு கண்டிப்பா வருவேன்; அப்புறம் தினம் வருவேன்; மிட்டாய் தருவேன்! இந்தாம்மா இன்றைக்கு.." என்றான் கிழவன். பழைய தயாரிப்பில் மீதியிருந்த ஒரு மிட்டாயை எடுத்து நீட்டினான்.

வேணி வாங்கிக்கொண்டாள். தன் கையில் புதைந்து கிடந்த நாலணவை நீட்டினாள். கிழவன் "வேண்டாம்மா" என்றான். வேணி 'சடக்'கென்று அதை அவனது பொக்கை வாய்க்குள் போட்டு விட்டாள். கைகொட்டிச் சிரித்தாள். கிழவனும் காசை எடுத்துவிட்டுச் சிரித்தான்.

திடீரென்று ஏதோ நினைவுக்கு வந்தவன்போல் "பாப்பா! நீ வீட்டுக்குப் போம்மா! முன்னிருட்டுக் காலம்–இருட்டு வந்துட்டா அப்புறம் பயமா இருக்கும்!" என்றான் கிழவன்.

அதே சமயம் "வேணி! வேணி!" என்ற சப்தத்துடன் குட்டைக் கரைக்கே வந்து சேர்ந்துவிட்டார் வேணியின் அப்பா. அவளையும் பார்த்துவிட்டார். வேணியைத் தேடி துடித்துக்கொண்டு வந்தவர் அவர். வேணிதான் கிடைத்துவிட்டாளே; அவருக்கு மகிழ்ச்சிதானே தோன்றவேண்டும்! ஆனால் ஏனோ கோபமும் வெறுப்பும் அல்லவா போட்டி போட்டுக் கொண்டு அவரது முகத்திலே ஆட்சி செலுத்துகிறது?

வேணி, தன் அப்பாவுடன் வீட்டுக்குப் போய் விட்டாள்.

* * *

மறுநாள் மாலை...

"மிட்டாய்; மிட்டாய்!" கிழவன் தான் தெருவில் நுழைந்து கொண்டிருந்தான். வேணியிடம் சொன்னதுபோலவே அவன் வந்துவிட்டான்.

வேணியின் வீட்டையும் நெருங்கி விட்டான் கிழவன். ஆனால் வாசலில் வேணியைக் காணோமே! கிழவன் வாசலுக்கருகில் வந்து நின்றான் "மிட்டாய்! மிட்டாய்!" என்று கத்தினான். உரக்கக் கத்தினான். ஆனால் வேணி வரவேயில்லை. கிழவன் மறுபடியும் கூவினான்.

வேணிவந்தாள். கிழவனுக்குக் கொள்ளை மகிழ்ச்சி! ஆனால், என்ன ஆச்சரியம்! ஆசையோடு ஓடிவர வேண்டிய வேணி, 'சடா'ரென்று தெருக்கதவைச் சாத்திவிட்டாள், கிழவனுக்கு ஒன்றும் புரியவில்லை.

"பாப்பா! பாப்பா! உனக்கு மிட்டாய் வேண்டாமா" என்றான்.

"வேந்தாம், போடா!"—வேணிதான் உள்ளேயிருந்து கத்தினாள். என்ன இது? வேணியா இப்படிப் பேசுகிறாள்? கிழவன் துடித்தே போனான்.

"ஏன் பாப்பா! உனக்காகப் புதுசா போட்டுக் கொண்டு வந்திருக்கேனே! காசுகூட வேண்டாம்—சும்மாவே தரேன் பாப்பா!" என்று கிழவன் மீண்டும் கத்தினான். ஆனால், மூடிய கதவு திறக்கப்படவே இல்லை!

"போடா, போ! எனக்கு வேந்தாம் உன் மித்தாய்! உன் மித்தாயைச் சாப்பிடக்கூடாது; சாப்பிட்டா செத்துப்போயிடுவேன்! எங்கப்பா சொன்னாரே! அதிலே **விஷம்** கலந்திருக்குதாம், விஷம்!"

"ஐயையோ! என்ன பாப்பா இது?"

"ஏன் நடுங்குறே கிழவா! எனக்கு எல்லாம் தெரியும்! இனிமே என்னை நீ ஏய்க்க முடியாது! நீ பறையனாமே! அப்பா எனக்கு எல்லாமே சொல்லிட்டார்! நான் இனிமே உன் மித்தாயைத் திங்கவும் மாட்டேன்; செத்துப்போகவும் மாட்டேன்! போ, நிக்காதே! ஓடிப்போ!"—வேணி கதவைத் திறக்காமலேயே துரத்தினாள். அதைத் தொடர்ந்து வீட்டிற்குள்ளே ஓடும் காலடியோசையும் கேட்டது.

கிழவன் திடுக்கிட்டுவிட்டான். " நீ பறையனும்!.... உன் மிட்டாயிலே விஷம் இருக்குதாம்! .... நான் சாப்பிட்டா செத்துப் போயிடுவேன் !" — இந்தப் பொல்லாத வாசகங்கள் அவன் காதுகளில் திரும்பத் திரும்ப ஒலித்தன. கத்தினன் "வேணி ! வேணி !" என்று. பலனே இல்லை !

"ஏது மறியா நெஞ்சிலே 'விஷம்' தூவப்பட்டு விட்டது!" என்று முணு முணுத்தான் கிழவன். நடந்தான். அதன் பிறகு அந்தத் தெருப்பக்கம் "மிட்டாய் ! மிட்டாய் !" என்ற அவனது குரல் கேட்கவே இல்லை !






# கிளியின் கதை

சிறிய ஊர் — அது ஒரு அழகான கிராமம். நான்கு புறமும் மலைகள்—ஊரின் நடுவே ஒரு சிற்றாறு— திரும்பும் திசை எல்லாம் பச்சைப் பசேல் என்ற தோட்டங்கள் — அப்பப்பா ; அந்த ஊரின் அழகே அழகு !

ஊரிலுள்ள சிறுவர் சிறுமிகளுக்கு—பள்ளிக்கூடக் குழந்தைகளுக்கு மாலை நேரத்தில் விளையாடுவதற்கென நல்ல நல்ல இடங்கள் இருந்தன. மலைக்

குன்றுகளின் சரிவு — ஆற்றங் கரை மணல் மேடு— இன்னும் எத்தனையோ ! ஆனல், அவர்களுக்கெல்லாம் ரொம்ப ரொம்ப மகிழ்ச்சியைத் தந்த இடம் எது தெரியுமா? ஒரு வயதான ஏழை விவசாயியின் வீடுதான்! ஆச்சரியமாக இருக்கிறதல்லவா ? சிறிய வீடு— அதைச் சுற்றி பெரிய கோதுமைத் தோட்டம்—அது நிறைய கொத்துக் கொத்தான கோதுமைக் கதிர்கள்— இவை எல்லாம் தான் அந்தத் தம்பி தங்கைகளைக் கவர்ந்திருக்குமோ என்று நினைக்கிறீர்களா? அதுதான் இல்லை. அந்த ஏழையின் வீட்டு வாசலில் தொங்கிக்கொண்டிருந்த ஒரு திறந்த கூண்டும், அந்தக் கூண்டிலிருந்த அழகான பச்சைக் கிளியும் தான் அவர்களை மகிழச் செய்தன. ஆமாம்; அந்தக் கிளியைக் கண்டுவிட்டால் அவர்களுக்கு ஒரே கொண்டாட்டம்— குதூகலம் ! "வாங்க ! வாங்க !" என்று அந்தக் கிளி கிழவன் சொல்லிக் கொடுத்த பாடத்தின்படி அழைக்கும் போது அவர்களுக்கு ஒரே சிரிப்பு — பழத்தைக் கொத்திக் கொத்தித் தின்பதைக் காணும்போது ஒரே பூரிப்பு !

அந்த ஏழை விவசாயியும் தன் வீடு தேடி ஓடிவரும் தம்பி தங்கைகளைக் காணும்போது ஆனந்தப்படுவான் ; பொக்கை வாய் திறந்து சிரிப்பான். ஏன் தெரியுமா ? அவனுக்கு உற்ருர், உறவினர் யாருமே இல்லை. அவனுக்கு இருந்த துணை—ஒரே ஒரு துணை—அந்தக் கிளிதான். குழந்தையிலும் மேலாக அதை அவன் வளர்த்து வந்தான். பாலூட்டுவான் ; பழம் கொடுப்பான் ; பாசத்தோடு கொஞ்சுவான் ; அவை எல்லாவற்றையும்விட 'முழுச் சுதந்திர'மும் தருவான். அது தன் விருப்பப்படி எப்போதும் பறக்கலாம் ; எங்கும் போகலாம். ஏனெனில் அந்தக் கிளியின் 'வீடு' இருக்கிறதே—அதுதான் கூண்டு—அதன் கதவு எப்போதும் திறந்தே யிருக்கும். கிளியும் சற்று நேரம் வெளியே பறந்து செல்லும். மற்ற நேரமெல்லாம் கூண்டிற்

குள்ளேயே இருக்கும், "வாங்க!, வாங்க!" என்ற 'பல்லவி'யைப் படித்துக்கொண்டே. அல்லது கோதுமைத் தோட்டத்தைக் காவல்புரியும் கிழவனின் தோளிலேயே உரிமையோடு தொத்திக் கொண்டிருக்கும்.

இப்படியே நாட்கள் சென்று கொண்டிருந் திருந்தால் நன்ருகத்தான் இருந்திருக்கும்...இல்லையா? ஆனுல், அதை எப்படிச் சொல்வது ; கிளியின் குணம் கொஞ்சம் கொஞ்சமாக மாறிக்கொண்டு வந்தது. குடம் பாலிலே துளி விஷம் கலந்தால் போதாதா ? அந்தக் கிளிக்கும் கெட்ட நண்பர்களின் தொடர்பு ஏற்பட்டு விட்டது. கோதுமைத் தோட்டத்தில் திருட்டுத்தன மாக நுழையும் காக்கைகளுடன் அது பழக ஆரம்பித்து விட்டது. நாளாக ஆக பழக்கம் முற்றிக்கொண்டே வந்தது.

முன்னைப் போல் எல்லாம் அது தன்னைப் பார்க்க வருகின்ற தம்பி தங்கைகளிடம் அதிகமாகக் கொஞ்சு வதில்லை ; கிழவனின் தோளிலும் அதிகமாக உட்காரு வதில்லை. காக்கைகளுடன் விளையாடிக் கொண்டி ருக்கவே அதற்கு நேரம் சரியாக இருந்தது. அதைக் கண்ட கிழவனின் மனம் ரொம்பவும் வருத்தப்பட்டது. தனக்கு ஒரே ஒரு மகன் இருந்து—அவன் தவருன வழி நடந்து—கெட்டுப் போயிருந்தால்கூட அவ்வளவு வருத்தப்பட்டிருக்கமாட்டான், அவன். அத்தனை கவலை ! அளவில்லா வேதனை !

நாட்கள் நகர்ந்தன. ஆனுல் கிளியின் கீழ்த் தரமான செயல்களோ அசையாமல் நிலைத்துவிட்டன. இப்போதெல்லாம் அது வீட்டிற்குக் கூடச் சரியாக வருவதில்லை ; வீட்டில் ஊர்ச் சிறுவர் சிறுமியர்கூட அவ்வளவாகக் கூடுவதில்லை ; எப்போதும் கேட்டுக் கொண்டிருந்த ஆனந்தக் கூச்சலும், ஆரவாரமும் குறைந்துவிட்டது. கிழவனுக்கு இது மிகமிகக் கலக் கத்தைக் கொடுத்தது.

ஒரு நாள் —

வீட்டு வாசலில் உட்கார்ந்து கோதுமைத் தோட்டத்தைக் காவல் செய்து கொண்டிருந்தான், கிழவன். தோட்டத்தில் அவனது காவலைக்கூட அலட்சியம் செய்து அதிகமான காக்கைகள் கூடி விட்டன. நன்ருக முற்றியிருந்த கோதுமையைக் கொத்தித் தின்ன அங்கே ஒரு பெரும்படையே திரண்டு விட்டது கிழவன் விரட்டினுன்; அவை நகரவில்லை. கல்லெடுத்து எறிந்தான்; கடுகளவும் பலன் கிடைக்க வில்லை. கிழவனுக்கு கோபம் வந்துவிட்டது. கண்களைப்போல காத்து வளர்த்த பயிரை சேதப்படுத்து வதென்ருல்....? கிழவனின் ஆத்திரம் அடங்கவில்லை. வேகமாக எழுந்தான். வீட்டிற்குள் நுழைந்தான், உடனேயே திரும்பியும் வந்தான். இப்போது அவனது கைகளில் பறவைகளைச் சுடும் துப்பாக்கி இருந்தது. காக்கைகளை விரட்ட—அவை தரும் தொல்லையைத் தடுக்க—சரியான வழி கண்டு பிடித்து விட்டான் கிழவன்.

காக்கைகள் துப்பாக்கியையும் — அதன் முனை தங்களை நோக்கித் திருப்பப்பட்டிருப்பதையும் கவனிக்க வில்லை; அவைகள் காரியத்திலேயே கண்ணுயிருந்தன. கிழவன் துப்பாக்கியைத் தயார் செய்துகொண்டான். குறிவைத்தான். ஆனுல் பாவம், அந்தக் காக்கைகளின் கூட்டத்திலேதான் அவனது உயிருக்கு உயிரான கிளியும் சேர்ந்திருப்பதை அவன் கவனிக்கவில்லை. அவனது பார்வை குறைந்த வயோதிகக் கண்களுக்கு அது தெரியவுமில்லை.

டுமீல்....

கிழவன் சுட்டுவிட்டான். குண்டு பறந்தது, காக்கைக் கூட்டத்தை நோக்கி. மறு கணம் ‘கா கா; கா கா’ என்று ஒரே சப்தம். காக்கைகள் திசைக்குத்திசை

தப்பிப் பறந்தன. ஆனல்...அந்த சப்தத்துக்கு மத்தியிலேதான் 'கீ கீ' என்ற ஈனக் குரலும் எழும்பியது.

கிழவன் திடுக்கிட்டான். என்ன சத்தம் அது? கிளியின் குரல் போலல்லவா இருக்கிறது? கிழவன் கிளிக் கூண்டைப் பார்த்தான். அதிலே கிளியைக் காணவில்லை. மறுகணம் துப்பாக்கியை வீசி எறிந்தான். தோட்டத்திற்குள் புகுந்தான். சப்தம் வந்த இடம் நோக்கி ஓட்டமாக ஓடினன்.

கிளியின் சப்தம் ஓயவில்லை. அதற்குள் அந்த இடத்தை அடைந்துவிட்டான் கிழவன். கீழே பார்த்தான். அதைத் தொடர்ந்து எழும்பிய அவனது "ஐயோ" என்ற அலறல் துப்பாக்கி சப்தத்தைவிடப் பெரிதாகக் கேட்டது. கிழவன் ஏன் அப்படிக் கத்தினன் தெரியுமா? அங்கே கீழே விழுந்துகிடந்தது கிழவனின் சொந்தக் கிளிதான்! அதுவும் பயங்கரமான நிலையில், இரத்த வெள்ளத்தில் கிடந்து துடிதுடித்துக் கொண்டிருந்தது!

கிழவன் கீழே உட்கார்ந்தான். கிளியை எடுத்தான். அவனுக்கு சொல்லமுடியாத படபடப்பு, துடிதுடிப்பு!

கிளியின் வயிற்றிலே துப்பாக்கிக் குண்டு பாய்ந்திருந்தது. அது கத்திக்கொண்டேயிருந்தது. சப்தம் வரவரக் குறைந்தது; கிழவனின் அன்பொழுகும் முகத்தை ஒரு முறை பார்த்தது; துள்ளி எழும்பியது; இறக்கைகளைப்'படபட'வென்று அடித்துக்கொண்டது; மறுகணம் அதன் சப்தம் அடங்கியது; இறக்கைகள் ஓய்ந்தன; தலை சாய்ந்தது; பிணமாகிவிட்டது!

கிழவன் அழுதான்; அலறினன். என்ன பலன்? பல ஆண்டு காலமாக அவனது பாசத்துக்கும்

பற்றுக்கும் உரிய ஒரே உயிராக இருந்ததே அந்தக் கிளி; அது கண நேரத்தில் துப்பாக்கிக் குண்டுக்குப் பலியாக வேண்டிய பரிதாபம் ஏன் ஏற்பட்டது?

உங்களுக்கு விடை கிடைக்கிறதா? ஆனால் அந்தக் கிழவனின் உலர்ந்துபோன உதடுகள் முணு முணுத்தன "கெட்ட சகவாசம்; கெட்ட சகவாசம்!" என்று!

கிளியின் உயிரில்லா உடலை எடுத்துக் கொண்டான் கிழவன். தள்ளாடித் தடுமாறி நடந்தான். அவன் கண்களிலிருந்து பெருகிப் பாய்ந்த கண்ணீர், கிளியின் உடலிலிருந்த வழிந்தோடிய இரத்தத்தோடு கலந்தது.

* * *

அதன் பிறகு கிளியைப் பார்க்கச் சென்ற தம்பி களின் கண்களில் கிளி அகப்படவில்லை; கீழ்க்கண்ட எழுத்துக்கள் தான் புலப்பட்டன:

"கெட்ட சகவாசம் வேண்டாம்!
கெட்ட சகவாசம் வேண்டாம்!"

[ஆங்கிலக் கவிதை ஒன்றைத் தழுவி எழுதப்பட்டது]



SITY EXTENSION